# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 23 | பெப்ரவரி 8, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


## சூ வருகிறார்

சீனத்து மக்களின் கண்ணின் மணியான சீனத்துப் பிரதமர் தோழர் சூ-என்-லாய், எதிர்வரும் 27-ந் தேதி இலங்கை வருகிறார்.

தோழர் சூ-வின் இரண்டாவது இலங்கை விஜயம் இது.

### ஸ்ரீமதி சுங் சிங்-லிங் (ஸ்ரீமதி சுன்யட்சன்) விஜயம்

மக்கள் சீனக் குடியரசின் உப-தலைவரும், சீனத்தின் தலைசிறந்த தேசியத் தலைவரான சுன்-யட்-சன் அவர்களின் பாரியாருமான ஸ்ரீமதி சுங் சிங்-லிங் இம்மாதம் இறுதியில் இலங்கை வருகிறார். இலங்கையில் அவர் அரசாங்க அதிதியாகத் தங்குவார். ஹொரணை ஸ்ரீபாலி வித்தியாலயத்தில் உரை நிகழ்த்த இலங்கை வரும் ஸ்ரீமதி சுன்யட்சன் மற்றும் பல முக்கிய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்.

# ஆறு மாதத்திற்கு நாலு யார்?

## ஆட்சிக்கு எத்தனை மாதம்?

## கோவணாண்டிகளாகு முன் கொதித்தெழுவோம்

**இவ்வாரம் முதல் ஆட்சியினர் துணிகளுக்கு ரேஷன் விதித்துள்ளனர். ஒரு அரிசிக் கூப்பனுக்கு ஆறு மாதத்திற்கு 4 யார் துணி தருவதென ஆட்சியினர் முடிவெடுத்திருப்பது, உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஆட்சியினரின் இந்த முடிவுக்குக் காரணம், வெளிநாட்டு நாணய சேமிப்புக் குறைவே என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

ஆனால், இதற்கான பொறுப்பாளி யார் என்பதை மக்களுக்கு அறிவிக்க ஆட்சியினர் தவறிவிட்டனர்.

கடந்த காலங்களில் இது பற்றி நாம் தீர்க்கமான ஆலோசனைகளையும், திட்டவட்டமான அபிப்பிராயங்களையும் ஆட்சியினருக்குத் தெரிவித்துள்ளோம். ஆனால் ஆட்சியினர் வெளிநாட்டு நாணயத்தைப் பாதுகாப்பதிலும், சேமிப்பதிலும் அக்கறை காட்டாது உதாசீனப் படுத்தியமையால் இன்றுஇந்த சிக்கலான நிலை உருவாகியுள்ளது.

ஆட்சியாளரின் வெளிநாட்டு நாணய சேமிப்பு ரூபா 40 கோடிக்குக் குறைந்துள்ளது.

இந்தத் தொகை மூலம் இலங்கைக்குத் தேவையான அரிசி, மருந்து வகைகளைத் தவிர வேறு எதையுமே வாங்க முடியாது.

இதனால், எல்லா இறக்குமதி அனுமதிகளையும் ஆட்சியாளர் ரத்துச் செய்திருப்பதாக அறிகிறோம்.

இந்த நிலையில், இன்று 4 யார் துணியாக இருப்பது, இன்னும் சொற்ப தினங்களில் 2 யாராகக் குறைக்கப் பட்டால் அது புதுமையில்லை.

காரணம்—

உள்நாட்டில் போதிய உற்பத்திப் பெருக்கமின்றி, தொழில் அபிவிருத்தியின்றி, இன்று நாட்டை நாசத்தில் ஆழ்த்திவரும் காலனி பொருளாதார முறையில் உடனடியான மாற்றம் ஏற்படும் வரை, நமது வெளிநாட்டு நாணய சேமிப்பு கூடப் போவதில்லை.

அதோடு, இந்த நாட்டின் ஜீவாதாரப் பொருட்களான தேயிலை, ரப்பர் போன்றவை வெளிநாட்டார் கையில் இருக்கும்வரை நம் நாட்டுப் பொருளாதாரத்திற்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

இந்த விஷயத்தில் ஆட்சியினர் சென்ற வாரம் இந்தோனேஷியா எடுத்த நடவடிக்கையைப் பின்பற்றுவது நல்லதாகும்.

பிஸ்கட், தெங்குப் பொருட்கள் ஆகியவைகளில் சமீப காலத்தில் கூடியுள்ள ஏற்றுமதி வர்த்தகம், மற்றும் பல பொருட்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். இதுநாள்வரை ஆட்சியினரின் தொழில் வளர்ச்சி வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படுபவைகளைப் பொருத்திப் பூட்டி விற்பனை பண்ணுவதுடன் நின்றுவிடுகிறது.

இந்தப் போக்கு நிசசயமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியை சீர்படுத்தப் போவதில்லை.

எனவே, மூல உற்பத்திகளைப் பெருக்க அதற்கான தொழிற் திட்டங்களை ஆட்சியினர் உடனடியாக உருவாக்க வேண்டும். இந்தத் துறையில் சோஷலிஸ நாடுகள் தாராளமாக உதவ முன்வந்தும் ஆட்சியினர் அது பற்றிப் போதிய கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர். ஏற்கெனவே சோஷலிஸ நாடுகள், டயர் பெக்டரி, துணி ஆலை, இரும்பு-எஃகு பெக்டரி போன்றவைகள் கட்டித்தர, அதுவும் நீண்டகால தவணையில் கடன் உதவ முன் வந்தன. ஆனால், ஆட்சியினர் இத் திட்டங்களை இன்னும் உதாசீனம் செய்தே வருகின்றனர். இந்தப் போக்கு நாட்டுக்கு நாசத்தைப் பயக்குமே தவிர, நன்மை பயக்காது.

இன்று இயங்கிக்கொண்டிருக்கும் சில பெக்டரிகள் கூட, நிர்வாகத் திறமை யின்மையாலும், ஊழல்களாலும் உருக்குலைந்து வருகின்றன.

தனியார் துறையிலிருந்து எடுக்கப் பட்ட சில கார்ப்பரேஷன்களின் இன்றைய மோசமான நிலை இதற்கு நல்லதொரு உதாரணமாகும்.

ஆட்சியாளரின் முதலாளிகள் சார்புக் கொள்கைகள் இன்றைய நிலைக்கான மற்றுமொரு காரணமாகும். இன்று, துணி விநியோகத்தைக் கூப்பன் முறைக்குக் கொண்டு வந்துள்ள ஆட்சியினர், வெள்ளவத்தைத் துணி ஆலை வேலை நிறுத்தம் 4 மாதங்கள் நடைபெற்றபோது, இது சம்பந்தமாக உடனடியாக அக்கறை செலுத்தி, வெள்ளவத்தை நிர்வாகத்தை நிர்ப்பந்த சமரசத்திற்குக் கொண்டுவராமல், பார்த்துக்கொண்டிருந்தனர்.

துறைமுக வேலை நிறுத்தத்தின் போது, ஒரு தனி நபரான மஹாநாமாவைப் பாதுகாக்க, ஒன்றரை மாத காலம் வேலை நிறுத்தத்தை நீடிக்கச் செய்தனர்.

ஆட்சியாளரின் இன்றைய போக்கு, ஒரு போதும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பிக்காது. இப் போக்கு, சீக்கிரமே சுதந்திர கட்சி அரசாங்கத்தை கவிழ்த்து விடும் என்பது நிச்சயம்.

'மக்கள் ஆட்சி' கூப்பாடு போடும் சுதந்திரக் கட்சி அரசாங்கம், ஈழத்தவர்களைக் கோவணம் கட்டும் ஆண்டிகளாக்குவதற்கு முன்பு, அதற்கு மக்கள் முடிவுகாண வேண்டும். ஈழத்து மக்களின் விமோசனத்திற்கு இதுஒன்றேநல்மார்க்கம்.

## திரிபே திரிபு!

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய தேசிய அமைப்பாளராகிய தோழர் சண்முகதாசனின் பிரசங்கத்தை 6-2-64' டெய்லி நியூஸ்' பிரசுரித்துள்ளது. அதில் பீட்டர் கெனமனோடு இணைந்து இயங்குபவர்கள் ''கே.-எம். கோஷ்டி''யென பத்திரிகை நிருபர் குறிப்பிட்டுள்ளார்'

இதே கோஷ்டியில் முன்னாள் முனிஸிப்பல் அங்கத்தவராகிய பண்டிதா அவர்களும் உள்ளாரென்பது எல்லோரும் அறிந்ததே'

எனவே ''கெனமன்-மெண்டிஸ்-பண்டிதா கோஷ்டி'' யென்று இவர்களை அழைக்கலாமே. ஆங்கில மொழி அமைப்பின்படி சுருக்கினால் இது ''கே-எம்-பி'' கோஷ்டியே.

கண்ணுக்கு எதிராக இவர்கள் வகுப்புவாதத்தை ஒரு ஆயுதமாக கையாளுவதால் இந்தப் பெயர்த் திரிபே திரிபு வாதிகளுக்கு பொருந்தும்.

—''ஏங்கல்ஸ் வாதி''

## மனித குலத்தின் எதிரி

கடந்த வாரம் இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்ஸிய சர்வகலாசலையில் உரைநிகழ்த்திய இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் ஐடிட், ''திரிபுவாதம், மார்க்ஸிஸம்- லெனினிஸத்திற்குமட்டுமின்றி, மனித வர்க்கத்திற்கே விரோதியாகும் இதை ஒழித்துக் கட்டுவது சகல மக்களினதும் தலையாயகடமையாகும்.'' என்றார்.

## உள்ளே....


புத்தாண்டு காலண்டர்

- வர்க்கத் தியாகிகளின் நினைவு நாட்கள்.

- சி. டி. யூ. எப். நிர்வாகிகள்

மற்றும் பல விபரங்களுடன்


**இலவசம்!**

## தலையங்கம்

### யார் பொறுப்பு?

துறைமுக வேலை நிறுத்தங்களினால் தான் வாழ்க்கை செலவு இன்று அதிகரித்துள்ளது என்று, அண்மையில் தொம்பேயில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ உளறிக் கொட்டியுள்ளார்.

பிரதமரின் இக் கூற்று உண்மையானால், இதற்கான பொறுப்பைப் பிரதமரும், சுதந்திரக் கட்சி அரசாங்க மந்திரிசபையுமே ஏற்க வேண்டும்.

அதோடு, பிரதமரின் இந்த உளறலில்எள்ளளவேனும் உண்மை இருந்தால், ஆட்சியினர் ஈழத் திருநாட்டு மக்களுக்கு மிகக் கொடிய துரோகம் செய்தவர்களாவர்.

காரணம், துறைமுக வேலை நிறுத்தங்கள், ஆரம்பமான முதல் இரு நாட்களினுள் முடிவுறத் தக்க நல்ல வாய்ப்புகள் இருந்தன.

வேலைநிறுத்தக்காரர்களும், மிகக் குறைந்த கோரிக்கைகளைப் பெற்று வேலைக்குச் செல்ல சம்மதம் தெரிவித்தனர். தொழில் கமிஷனரும் தொழிலாளர்களின் கோரிக்கைகளில் அடங்கியுள்ள மிகச் சாதாரண தன்மையை ஏற்று, ஆட்சிக்கு சிபாரிசு செய்தார்,

ஆனால், மந்திரி மஹாநுமாவுக்காக, ஒரு தனி மனிதனின் பிடிவாதத்திற்காக ஆட்சியினர் கோரிக்கைகள் எதையுமே தருவதில்லை என்று விதண்டா வாதம் பண்ணினர். ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தைக்கு வரக்கூட மறுத்தனர்.

துறைமுக வேலை நிறுத்தத்தினால் ஈழத்திருநாட்டு மக்கள் அனைவரும் கஷ்டமடைய விருப்பதை, வாழ்க்கை செலவு கூட இருப்பதை உணர்ந்த ஆட்சியினர் ஒரு தனி மஹாநும சமரவீராவுக்காக ஏன் பிடிவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தனர்?

ஒன்றரை மாதத்திற்குப் பின் ஆட்சியினர் வேலை நிறுத்தக் காரர்களுக்கு தர இணங்கியது, ஆரம்பத்தில் அவர்கள் கேட்டதிலும் அதிகமானதாகும். உண்மையில், தொழிலாளர்களின் ஐக்கியம் ஆட்சியைப் பணிய வைத்தது.

ஆட்சியினர் ஆரம்பத்திலேயே இந்தக் கொள்கையை ஏன் பின்பற்றவில்லை?

பிரதமரின் உளறல் ஆதாரமற்றது என்பதற்கு 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம், 1961-ம் ஆண்டு அக்டோபர் மாத காலம், சிறந்ததொரு உதாரணமாகும். இக் கால கட்டத்தில் வேலை நிறுத்தங்கள் எதுவுமே நடைபெறவில்லை. ஆனால், வாழ்க்கைப் புள்ளி மக்களின் மென்னியை நெறுக்கிக் கொண்டிருந்தது.

ஆட்சியின் திறமையின்மையை, நிர்வாகத்தினரின் பங்கலோட்டுத்தனத்தை, காலனி பொருளாதார அடிப்படையை மாற்றி அமைக்கப் போதிய திட்டமில்லாத நிலையை மூடி மறைக்க வாழ்க்கைப் புள்ளி அதிகரிப்புக்கான பழியை வேலை நிறுத்தங்களின் மீது பிரதமர் சுமத்த முயல்கிறார்.

இந்த உளறல்களால் நாட்டு மக்களை ஏமாற்றிவிட முடியாது என பிரதமரை எச்சரிக்கிறோம்.

# கெனமன் - மெண்டிஸ் கும்பலின் துரோகம்!

## சண்முகதாஸன் உரை

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அமைப்பாளரும், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் செயலாளருமான தோழர் நா. சண்முகதாசன் 5-2-64ல் கொழும்பு நகரசபை மண்டபத்தில் 'கம்யூனிஸ்ட் இயக்கத்தில் அபிப்பிராய பேதங்கள் என்ன?' என்ற பொருள்பற்றி சொற்பொழிவாற்றினர்.

''கெனமன்-மெண்டிஸ் கும்பல், தொழிற்சங்க இயக்கத்தில் என்றுமில்லாதபடி, தொழிற் சங்கங்களை பிளவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் மன்னிக்க முடியாத இந்த நடவடிக்கைகளுக்கு தொழிலாளி வர்க்கம் விரைவில் நல்ல பாடம் கற்பிக்கும்'' என்று அவர் கூறினர்.

மேலும், ''இந்த முயற்சிகள் தற்செயலாக உருவானவை அல்ல. இன்று தொழிற்சங்க இயக்கம் ஐக்கியப்படும் காலகட்டத்தில் உள்ளது. 1963-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 29-ம் திகதி சிலின்கோ மாளிகையில் நடந்த அகில இலங்கை தொழிற்சங்கங்களின் மாநாட்டில் முதல் முறையாக, சகல பிரதான தொழிற்சங்க மத்தியஸ்தானங்கள் ஒன்று கூடி ஏற்றுக்கொண்ட 21 கோரிக்கைகள், கூட்டுக் கமிட்டியினுல் பரிசீலனை செய்து, பூர்த்தி செய்யப்பட்டு, 1964 ஜனவரி 31ம் திகதி எல்லா தொழிற்கங்கங்களும் கைச்சாத்திட்டுள்ளன. இக் கோரிக்கைகள் அரசாங்கத்திற்கும் முதலாளிகட்கும் சமர்ப்பிக்கப்படும். 21 கோரிக்கைகளின் அடிப்படையில் போராட தொழிற்சங்க இயக்கம் முழுவதும், துடித்துக் கொண்டிருக்கிறது'' என்று கூறினர்.

தொழிற்சங்க இயக்கம் முழுதினதும் ஒற்றுமை அவசியமான இந்தக் காலகட்டத்தில் தான் சீர்குலைவுவாதிகளான கெனமன்-மெண்டிஸ் கும்பல், தொழிற்சங்க இயக்கத்தை பிளவுபடுத்தவும், தொழிற் சங்கம் ஒன்று உள்ள இடத்தில் வேறு போட்டிச் சங்கம் அமைக்கவும், இன்னுமொரு சம்மேளனம் அமைக்கவும் முன்வந்துள்ளனர். இது நன்மை பயக்காது. ஐக்கியத்தை சீர்குலைத்து தொழிலாளர்களைத்தான் பாதிக்கும். கெனமன்-மெண்டிஸ் கும்பல் என்ன காரணங்களை முன்வைத்தாலும், இந்த நடவடிக்கைகள் முதலாளி வர்க்கத்திற்குத்தான் உதவியாகும் என்பதை சிந்திக்கும் திறனுள்ள எவனும் புரிந்துகொள்வான். 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்தை இது பலவீனப்படுத்தும் என்பதும் தெளிவு. இதனுல்தான் தரிபுவாதம் தொழிலாளி வர்க்க இயக்கத்துன் புகுந்துள்ள, பூர்ஷுவா (முதலாளித்துவ) சித்தாந்தம் என்று நாம் கூறுகிறோம் எனக் குறிப்பிட்டார்.

இத் திரிபுவாதத் தலைவர்கள், தொழிலாளர்களைப் பார்த்து, புரட்சிகரப் போராட்டங்களைக் கைவிட்டு சமாதானமான பாராளுமன்ற போராட்டங்கள் நடத்தும்படி கூறினர்கள். தொழிலாளர்கள் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்: அந்த முயற்சியில் தோல்வி கண்டதும், தொழிலாளிகளைப் பிளவுபடுத்தி, அதன் மூலம் அவர்கள் போராட்டங்களை பலவீனப்படுத்த-தடைசெய்ய திரிபுவாதிகள் முயல்கின்றனர். குறிப்பாக எப்போதுமே, தொழிலாளர்களுக்கு புரட்சிகரமான தலைமை கொடுத்த இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தை சீர்குலைக்க முனைகின்றனர்.

மெண்டிஸ், சி-டி. யூ. எப். பின் 16-வது மாாநாட்டிலிருந்து வெளியேறவும், வேறு தொழிற்சங்க சம்மேளனம் உருவாக்கவும் காரணம் என்ன? அவர் வெளியேற்றப்படவோ, நீக்கப்படவோ இல்லை. இரண்டு மணிநேரம் அவர் நிகழ்த்திய தலைமை உரையை, குழப்பாது பொறுமையுடன் செவிசாய்த்தோம். இருந்தும், அவர் ஏன் வெளியேறினர்? இதில் கவனிக்க வேண்டியது என்னவென்னுல், ஏற்கனவே, தயார்செய்யப்பட்ட பேச்சின்படி, அவர் வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் வேறொரிடத்தில் எடுக்கப்பட்டது.

சண்முகதாசனும், சி. டி. யூ. எப். பும் ஐக்கிய முன்னணிக்கு விரோதிகளாம். அதனுல்தான், அவர் வேறு சம்மேளனம் ஸ்தாபித்தாராம். இதை நாங்கள் நம்பட்டுமாம். இது சுத்தப் பொய் மட்டுமல்ல; முழுப் பூசணிக்காயை பிடி சோற்றில் மறைப்பது போலாகும். இ. தொ. ச. ச. வை சீர்குலைக்கும் தனது முயற்சியில் மெண்டிஸ், பெக்டரிகளில் உள்ள சகல கம்யூனிஸ விரோதிகளுடனும் முன்னணி அமைத்துள்ளார்.

எலிபண்ட் ஹவுஸ் சங்கத்தில் உள்ளதுபோல், இவர்களின் பிரதான ஆதரவாளர்கள் யூ. என். பி, ஸ்ரீலங்கா அங்கத்தவர்களான இவர்கள் தான் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள். சண்முகதாசன் இ. ஐ. முவிற்கு எதிரியென்று மெண்டிஸ் கூறுவாரா? அவ்வளவு அக்கறை இருந்தால் ஏன் தனது ஆதரவாளர்களை சமசமாஜ, எம். ஈ. பி யூனியனில் சேரும்படி சொல்லக் கூடாது? ஏன் புதிய சங்கங்கள் அமைக்கிறார்?

## தொழிலாளி வர்க்கம் மன்னிக்காது

மேலும் தொழிலாளர்களின் அரசியல் அபிப்பிராயங்களின் அடிப்படையில் தொழிற் சங்கங்கள் ஏற்படவேண்டும் என்ற கொள்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு எப்போது ஏற்பட்டது. அரசியல், இன, சமய வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது, ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர் சகலரும் ஒரு தொழிற் சங்கத்தில் சேர வேண்டும் என்றுதான் கம்யூனிஸ்ட் கட்சியும் சி. டி. யூ. எப்பும் தொழிலாளர்கட்கு சொல்லிவந்திருக்கிறது. இன்றுள்ளது போல், அரசியல் கட்சிகளின் வால்பிடிகளாக ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு சங்கம் அமைப்பது, தொழிற்சங்க இயக்கத்திற்கு பாதகமாளதென்றும், இது தவறென்றும் நாம் எப்போதும் கூறிவந்துள்ளோம். அரசியல் அபிப்பிராயங்களுக்கு அப்பாற்பட்டு தொழிற்சங்கங்களை ஐக்கியப்படுத்துவதே எமது கொள்கையாக இருந்து வருகிறது.

தனது வாழ்நாளில் கூடிய காலத்தை உலக தொழிற் சங்க சம்மேளனத்தின் சர்வ தேசமாநாடுகளில் செலவிட்ட மெண்டிஸ், தனது மூளையை கொஞ்சமாவது பாவித்து, அங்கு நடந்த விவாதங்களைக் கவனித்திருந்தால், அவருக்கு தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தின் முக்கியத்துவம் கொஞ்சமாவது காதில் ஏறியிருக்கும்.

ஆனுல், இன்று கெனமன்—மெண்டிஸ் கும்பல் இதற்கு நேர்மாருக செயல்படுகின்றனர். இ. ஐ. மு. வை ஆதரிக்காதவர்கள் என்ற வார்த்தை ஜாலங்களை முன்வைத்து தொழிற்சங்க இயக்கத்தை பிளவுபடுத்துகின்றனர்.

இதற்கெல்லாம், உண்மையான காரணம் குருநாதர் குருஷ்சேவிற்கும், சோவியத்து ஸ்தானிகராலயத்திற்கும், தம்மிடமும் தொழிற்சங்கம் இருக்கிறதென்று பாசாங்கு செய்வதற்கே ஆகும் என சண்முகதாசன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில், எனக்கெதிராக இவர்கள் நடத்தும் வகுப்புவாதப் பிரசாரம், இவர்களின் அரசியல் அறிவிற்கு ஓர் எடுத்துக் காட்டு. வகுப்புவாத ரீதியில் என்னை கட்சியிலிருந்து விலக்கவில்லை என அண்மையில் கெனமன் மறுக்க முயன்றுள்ளார். வகுப்புவாதரீதியில் தான் நான் விலக்கப்பட்டேன் என்று நான் என்றுமே சொல்லவில்லை.

மார்க்ஸிஸ-லெனினிஸத்தின் புரட்சிகரக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்காக, தொழிலாள வர்க்கத்தையும், கட்சியையும் திரிபுவாதச் சேற்றிற்குள் இழுத்துச்சென்ற திரிபுவாதத் தலைவர்களுக்குத் தடையாய் இருந்ததற்காக, புரட்சிகரமற்ற பாராளுமன்றப் பாதையில் போக மறுத்ததற்காகத்தான் நான்விலக்கப்பட்டேன். என்னை கட்சியிலிருந்து விலக்கியபின், நான் தமிழனுகப் பிறந்த ஒரே காரணத்தைப் பாவித்து, வகுப்புவாதத்தைக் கட்டவிழ்த்து, சிங்களத் தொழிலாளர் மத்தியில் இருந்து என்னை அப்புறப்படுத்த முயன்ருர்கள் என்ருர் சண்முகதாசன.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது, இன்று கெனமன் கும்பல் ஓர் அரசியல் இயக்கமாக உயிர்வாழ்வது இ. ஐ. மு. வின வாலைக் கட்டிப் பிடித்துத் தொங்குவதால் மட்டும்தான். இல்லாவிடில் இவர்கள் முன்பே அரசியல் துறவி ஆகவேண்டியவர்கள். தமக்கென எந்த இயக்கமும் இல்லாதவர்கள் இன்று கம்யூனிஸ இயக்கத்தினுல் தூக்கி எறியப்பட்டதுபோல் இந்த சீர்குலைவு வாதிகள். ஏனைய இடதுசாரிக் கட்சிகளில் வளர்ந்துவரும் புரட்சிகர சக்திகளினுல் உதறித் தள்ளப்படும் காலம் வெகு தூரத்திலில்லை எனத் தோழர் சண்முகதாசன் குறிப்பிட்டார்.

எம்மைப் பொறுத்தமட்டில் கடந்த மத்தியக் கமிட்டி செய்யத் தவறியதை நாம் செய்துவிட்டோம். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 7-வது தேசிய மாநாட்டை கூட்டி ஓர் புதிய தலைமையை தேர்ந்தெடுத்து விட்டோம். கம்யூனிஸ்ட் கட்சியின் வாசலில் இருந்த ''வேலை காலியில்லை'' என்ற பலகையை உடைத்தெறிந்து விட்டோம். துணிகரமாக தொழிலாளி வர்க்கத்திலிருந்து நாம் அங்கத்தவர்களைக் கட்சியில் சேர்க்கிறோம்.

தொழிலாளி வர்க்கத்திற்கு தத்துவார்த்த பயிற்சி கொடுத்தும், மார்க்ஸிஸ—லெனினிஸ சித்தாந்த நூல்களை சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்தும், தினசரிப் பத்திரிகை ஆரம்பித்தும் தொழிலாளி வர்க்கத்தின் சிறந்த மணிகளை கட்சியில் சேர்த்தும், தோழர் லெனின் நியமித்த அடிப்படையில் ஓர் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கி, இந் நாட்டில் விரைவில் சோஷலிஸத் ஆட்சியை அமைப்பதற்காக, தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமை தாங்கச் செய்வது தான், வருகிற இரு வருடங்களுக்குள் நாம் செய்து முடிக்க இருக்கும் பணி என்ருர் அவர்.

---

## ஈயடிக்கக் கூட இடுப்பில்லாத் தலைவர்கள்!

சகர முதற் சொல்லில் இருக்கின்ற சக்திதனைப்
பகர மறுத்ததேன் பேடு.

சிந்தனை செங்கொடி செம்படை சத்தியம்
மந்தமாய்ப் போனதோ சொல்.

ஈயடிக்கக்கூட இடுப்பில்லாத் தலைவர்களின்
வாயடியோ வெல்லும் படை.

திட்டித் தொலைத்தால் தேய்ந்திடுமோ பொதுவுடமை
பெட்டைப் படையே நீ சொல்.

அமெரிக்க நாட்டில் அடகுக்கடை வைக்க
''அய்யா'' குருஷ்சோவே போ!

மாப்பிச்சை கேட்ட குருஷ்சோவே ஆப்பிழுத்த
குரங்காவாய் நாளை பொறு!

மட்டி மடையன் பேதை மீலேச்சனுக்குக்
குருஷ்சோவே உற்ற குரு.

மாஸ்கோவை விட்டுக் குருஷ்சோவை ஓட்டுதற்குச்
சோவியத்தே பொங்கி எழு!

கொள்கை மறந்த குருஷ்சோவின் வெறும் தலைக்கு
முள்ளு முடியே பொருந்தும்

கொப்பியடிப்பூனை எலிபிடிக்கா தென்பதற்குத்
திரிபப்பரே தக்க சான்று

-மா சே-துங்கன்

# வட மாகாண திரிபுவாத முதலாளிகளே, அடுக்காது இக்கொடுமை!

## நான் செய்த குற்றமென்ன?

இன்று பொய்யிலேயே வாழும்பீட்டர்கெனமன், மெண்டிஸ் கும்பலின் தேசாபிமானி, வட-மாகாணசீவல், தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் எம். சி. சுப்பிரமணியத்துக்கும், இராசையாவுக்கும் சி. டி. யூ. எப். மாநாட்டில் கலந்துகொள்ள சி.டி.யூ.எப். நிர்வாகிகள் இடந்தர வில்லை என்று பிரமாதப் படுத்தி எழுதி இருந்தது. இதற்கு நாம் அண்மையில்பதில் தந்திருந்தோம். எமது பதிலின் விளைவு, கள்ளுத் தொழிலாளருக்கு வேலை நீக்கம். வேலைநீக்கம் செய்யப்பட்ட அத் தொழிலாளி எமக்கு அனுப்பியுள்ள கடிதத்தை இங்கு பூரணமாகப் பிரசுரித்துள்ளோம். இதே கடிதத்தை திரிபுவாதிகளுக்கும் அனுப்பியுள்ளதாக இத் தோழர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் தங்கள் பத்திரிகையில் வெளியான கட்டுரையொன்றில், வட இலங்கைச் சீவல் தொழிலாளர் சங்கத்தில் ஒரேயொரு தொழிலாளிதான் உண்டு என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அது முற்று முழுதாக உண்மை. அந்தத் தொழிலாளி நான் தான். ஆனால், நீங்கள் அதை எழுதியதன் காரணத்தால் குற்றமறியாத நான் பழி வாங்கப்பட்டிருக்கின்றேன். இதை என் மனக் கலையுடன் உங்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன். அ. இ. சி. த. மகாசபைத் தலைவரும், வட-இலங்கை சீவல் தொழிலாளர் சங்கக் காரியதரிசியுமான திருவாளர் எம். சி. சுப்பிரமணியம் அவர்களுடைய கள்ளுக்கடையில் நீண்டகாலமாக நான் வேலை பார்த்து வந்தேன்.

கடந்த 31 - 1 - 64 மாலை நான் கடையில் வேலை செய்துகொண்டிருந்தபொழுது திரு. சுப்பிரமணியம் அவர்களின் சகோதரியாகிய ஐயம்பிள்ளை விசாலாட்சி அவர்கள் என்னை வேலையை விட்டு நீக்கிவிட்டதாக அறிவித்தார்கள். இதை அவர் கூறும்போது திரு சுப்பிரமணியம் அவர்களும் கூட இருந்தார்கள். அவரிடம் நான் செய்த தவறு என்னவென்று காரணம் கேட்டேன். அவர் விளக்கமாகப் பதில் கூற மறுத்துவிட்டார். கடைசி நிமிடம்வரை நான் வேலைநீக்கம் செய்யப்படுவேனென்று எனக்குத் தெரியாது. எதுவித முன்னறிவித்தலும் எனக்குக் கிடைக்க வில்லை. தை மாத சம்பளமும் தரப்பட வில்லை.

நான் ஒரு அரசியல் கட்சியிலும் சேராதவன். ஆனாலும் எனக்கு அரசியல் ஆர்வம் உண்டு. இன்று இருக்கும் சீன-ரஷ்ய அபிப்பிராய பேதங்களில் சீனாவின் தர்க்க ரீதியான அரசியல் விவாதங்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை. ஆனால், நான் இது சம்பந்தமாக யாரோடும் முரண்பட்டுக் கொள்வதில்லை. நான் உண்டு; எனது வேலையுண்டு. சில சந்தர்ப்பங்களில் திரு, சுப்பிரமணியம் அவர்களின் கோஷ்டியைச் சேர்ந்த பலர் இரகசியமாகவும் பகிரங்கமாகவும் அரசியல் பேசுவதுண்டு. அவர்கள் பேசுவதற்குத் தடையில்லாமல் நான் அவ் விடத்தை விட்டு அகன்று விடுவேன். திரு சுப்பிரமணியம் அவர்களே இது விஷயத்தில் என்னைப் புகழ்ந்துள்ளார். தங்கள் தொழிலாளி பத்திரிகையில் வெளியான கட்டுரைதான் என்னை இந்நிலைக்கு உள்ளாக்கியுள்ளது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. உங்கள் கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ள திரு இராசையா அவர்களுடைய தந்தையார் எனது இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். மூன்று குழந்தைகளின் தந்தையாகிய என்னை இப்படிப் பழி வாங்கிவிட்டார்கள். இந்தக் கொடுமையை அ. இ. சி. த. மகாசபைக்கும், வட-இலங்கை சீவல் தொழிலாளர் சங்கத்திற்கும், இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்திற்கும், தொழில் கந்தோருக்கும் அறிவித்துள்ளேன். சிறுபான்மைத் தமிழர்களின் நலவுரிமைக்காகப் போராடும் மகாசபையும், பேரளவில் ஏனும் சீவல் தொழிலாளர் ஸ்தாபனமாகிய சங்கமும் ஏற்ற நடவடிக்கை எடுக்கும் என நான் நம்ப முடியுமா?

சீவல் தொழிலாளர் சங்கக் காரியதரிசியாகவும், நிர்வாகக் காரியதரிசியாகவும் இருப்பவர்கள் திரு சுப்பிரமணியமும், இராசையாவுமே. மகா சபையின் தலைவராய் இருப்பவர் திருவாளர் எம். சி. சுப்பிரமணியம் அவர்களே. என்னதான் சாதி ரீதியான ஒற்றுமை பற்றிப் பேசினாலும், சங்கங்கட்டி அமைத்தாலும், வர்க்கம் வர்க்கமாகவே இருக்கும் என்ற உண்மையை தொழிலாளியாகிய நான் அனுபவ ரீதியாகப் புரிந்துகொண்டேன். சாதி உறவோ, ரத்த உறவோ இன்றி, ஈன இரக்கமின்றி முதலாளி வர்க்கத்தைக் கழுவிலேற்றிக் கொல்லும் வரை என்னைப்போன்ற பஞ்சைகள் ஓய்ந்திருக்கக் கூடாது என்ற உண்மையை தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இத்தால் உணர முடியுமென நினைக்கின்றேன்.

இங்ஙனம்,
உண்மையுள்ள
அ. தில்லையம்பலம்

# தமிழ் மக்களின் கதி என்ன?

## சமஷ்டிக் கட்சியின் நேரடிப்போராட்டம்

மீண்டும் சமஷ்டிக் கட்சி தமது நேரடிப் போராட்ட ஸ்டண்டுகளில் ஒன்றை ஆரம்பிக்க இருக்கின்றதாம்.

சமஷ்டித் தலைவர்கள் தமது கோரிக்கைகள் நியாயமானவை, நீதியானவை என்று சொல்லி வருகிறார்கள், தேசிய இனங்கள் வாழும் ஒரு சமுதாய அமைப்பில் எழும் பிரச்சினைகளைச் சமஷ்டி அமைப்பு ஒன்றினால்தான் தீர்க்கமுடியுமென்று கூறுகின்றார்கள் சமஷ்டிவாதிகள். இதற்குச் சான்றாக சோஷலிஸ நாடான சோவியத் யூனியனையும், முதலாளித்துவ நாடான கனடாவையும், நிறத்துவேசம் படைத்த தென்-ஆபிரிக்காவையும் தங்கள் வாதங்களுக்கு ஆதாரமாகக் காட்டுகின்றார்கள்.

அதே நேரத்தில், இந்த நியாய பூர்வமான சமஷ்டிக் கோரிக்கை கொடுக்கப்படாவிட்டால், தங்களுடைய விருப்பத்திற்கு முரணான பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து அதற்காகப் போராட நிர்ப்பந்

## நாட்டு நடப்பு

தம் உருவாகும் என்றும் சமஷ்டி வாதிகள் சொல்லுகின்றார்கள்.

இனி, தமிழர்கள் சிறுபான்மையினராக வாழும் இந்தியாவைப் பார்ப்போம். அங்கு தி. மு. க. ''திராவிடநாடு'' கோரிக்கையை முன்வைத்தது. ஆனால், இன்று தி.மு.க. தலைவர் அண்ணாத்துரை இந்தத் ''திராவிடநாடு'' பிரிவினைக் கோரிக்கையை விட்டு, சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். தி. மு. க. வின் இன்றைய கோரிக்கை இங்குள்ள சமஷ்டிவாதிகள் இன்று என்ன செய்கிறார்களோ அதற்கு நேர் எதிரிடையானதாகும்.

இது மலைப் பிரதேசத்தில் சென்றுகொண்டிருக்கும் ஒரு புகையிரத வண்டியின் முன்புறமுள்ள எஞ்ஜின் மேலுக்கு இழுக்கும் அதே நேரத்தில், பின்புறமுள்ள எஞ்ஜின் மேலுக்குத் தள்ளுவதை நினைவுக்குக் கொண்டுவருகின்றது.

ஏதோ சில காரணங்களால் முன் எஞ்ஜினிலுள்ள சாரதி புகை வண்டியைப் பின்னுக்கு றிவேஸ் செய்யத் தீர்மானித்து எஞ்ஜினை றிவேஸ் செய்யும் அதே நேரத்தில், பின் எஞ்ஜினிலுள்ள சாரதி முன்கொண்டு செல்ல எஞ்ஜினை முன்னுக்கு செலுத்திக் கொண்டிருந்தால் புகையிரதப் பெட்டிகளுக்கும், அவற்றிலிருந்தும் பிரயாணிகளுக்கும் என்ன கதி நேரும்?

பரந்த தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவராகத் தம் பட்டமடிக்கும் தி.மு.க. தலைவர் அண்ணாத்துரை முன் எஞ்ஜினிலுள்ள சாரதி; ஈழத்துக் காந்தி இடைநடுவில் வாபஸ் வாங்கும் இணையில்லா சமஷ்டித் தலைவர் செல்வநாயகம் பின் எஞ்ஜின் சாரதி; இவர்கள் நடுவில் தமது எதிர்காலத்துக்கு சரியான மார்க்கம் எது என்பதைக் காணமுடியாது தவிக்கும் தமிழ் மக்கள்தான் பிரயாணிகள். இந்த நிலையில் தமிழ் மக்களுடைய தலைவிதி என்னவது?

காலம் பதில் கூறும்!

—நீர்வை பொன்னையன்,

பனாமா போராட்டம் கடந்த 12-1-64-ல், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் தலைவர் தோழர் மா-சே-துங் வெளியிட்ட அறிக்கையின் முக்கிய பகுதியை இங்கு வெளியிட்டுள்ளோம்.

# பனாமா மக்களுக்கே வெற்றிகிட்டும்

## மாமேதை மா-சே-துங் அறிக்கை

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக பனாமா மக்கள் நடத்தும் வீரப் போராட்டம், அவர்களின் தேசிய சுயாதீனத்தைப் பாதுகாக்க நடத்தப்படும் தேசாபிமானச் சமராகும்.

பனாமா கால்வாய்ப் பிரதேசத்தில் தமது சுயாதிபத்தியத்தை நிலைநாட்டப் பனாமா மக்கள் நடத்தும் இவ் வீரோதாரப் போராட்டத்தில் சீன மக்கள் உறுதியுடன் அவர்கள் பக்கம் துணை நிற்கிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியம், உலக மக்களின் மிகக் கொடிய எதிரியாகும்.

பனாமா மக்களுக்கு எதிராகவும், சோஷலிஸ்ட் கியூபாவின் வளர்ச்சியைத் தடுக்கவும் பெரும் சதிகள் புரிந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், இன்று, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அம் மக்களை அடக்கவும், அவர்களின் தேசிய-ஜனநாயக புரட்சிப் போராட்டங்களை நசுக்கவும் முயன்று வருகிறார்கள்.

ஆசியாவில், தாய்வானில், தென் கொரியாவில், தென்—வியட்நாமில், ஜப்பானில், லாவோஸில், கம்போடியாவில் மற்றும் பல நாடுகளில் ஆக்கிரமிப்புத் தலையீடுகள் நடத்தி வருகிறார்கள். அண்மையில், 7-வது கப்பற் படையை இந்திய சமுத்திரத்திற்கு அனுப்பி தென்-கிழக்கு ஆசிய நாடுகளின் பாதுகாப்பை அச்சுறுத்துகின்றார்கள்.

ஆப்பிரிக்காவிலும், தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்கவும், புதிய காலனி ஆதிக்கத்தைத் திணிக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் முயன்று வருகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளை ட்ரூமன் தொடங்கி, ஐசன்ஹோவர், கென்னடி ஊடாக இன்று ஜான்சன் அமுல் படுத்தி வருகிறார்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கைகளில் அணுக் குண்டும், ஹைட்ரஜன் குண்டும் இருப்பது மக்களை அவர்களுக்கு அடிமைப் படுத்திவிடாது, மக்கள் அடிமைப் படவும் மாட்டார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அவர்களின் பாதந் தாங்கிகளுக்கும் எதிரான மக்களின் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும், முன்னேறும்.

# "இந்திய வம்சாவழியினர் பிரச்சினை தீர

## "7-வது கட்சிக் காங்கிரஸ் உலகுக்கு உ

முதலில் எமது இந்த மாநாடு பல வழிகளில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாநாடாகும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். இந்த மாநாடு தேசிய ரீதியான அர்த்தத்தில் மட்டும் முக்கியத்துவம் பெற்றதல்ல, மாருக, நாம் திரிபுவாதத்திற்கு எதிராக நடாத்திக் கொண்டிருக்கும் போராட்டத்தின் காரணமாக இம்மாநாடு, இதனை உன்னிப்பாக அவதானித்துவரும் உலகெங்குமுள்ள மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகள் அனைவருக்கும் மிகுந்த முக்கியத்துவமுடையதுமாகும். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகள் எமது அனுபவத்திலிருந்து திரிபுவாதத்திற்கெதிரான தமது போரரட்டத்தில் தாம் உபயோகிக்கவேண்டிய தந்திரோபாயங்களைக் கவனமாகக் கற்று வருகின்றனர்.

கம்யூனிஸ்ட்கட்சித் தலைமை திரிபுவாதிகளாயிருக்க, அக்கட்சியிலுள்ள மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகள் கட்சி அங்கத்தவர்களின் மிகப் பெரும்பாலானேரின் ஆதரவுடன் கட்சி மாநாட்டைக் கூட்டக்கூடியதாயிருந்த முதலாவது மாநாடாக முழு உலகிலும் இலங்கை உதாரணமாக விளங்குகிறது.

### சி. டி. யூ. எப். மாநாடு

கடந்த மாதம் நடந்த சி. டி. யூ. எப்பின் 16.வது மாநாட்டிற்கும் இது பொருந்தும். கட்சித்தலைமை திரிபுவாதிகள் கையிலிருக்க, கட்சியின் கீழுள்ள பிரதான வெகுஜன அணியில் மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகள் தமது தலைமையை நிலைநாட்டக் கூடியதாகவிருந்ததும் 16-வது மாநாட்டில் நாம் ஈட்டிய வெற்றியே உலகில் முதலாவதாகும்.

ஆகவே, மார்க்ஸிஸ-லெனினிஸத்தின் தூய்மையைக் காக்கவும், திரிபுவாதத்தை முறியடிக்கவுமான எமது போராட்டத்தில் நாம் ஏற்கெனவே ஈட்டியுள்ள வெற்றிகளைக் குறைத்து மதிப்பிட வேண்டாதிருக்க உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

### பொறுக்கவில்லை

பீக்கிங் வானெலியும், சீனப் பத்திரிகைகளும் எமக்குத் தரும் ''பிரபல்யத்தை''க் காணப் பீட்டர் கெனமனுக்குப் பொறுக்கவில்லை. அல்பேனியக் கட்சியினதும் அரசினதும் தலைமையை வீழ்த்த மாஸ்கோ வானெலி மூலம் கோரிய குருஷ்சோவின் இந்தச் சீடர்களுக்குச் சீனத் தோழர்களை அவதூறுசெய்ய வாயில்லை வக்கில்லை என்பது ஒருபுறமிருக்க, எமது பங்கின் முக்கியத்துவத்தை சீனத் தோழர்கள் உணர்கின்றனர் என்பதனுல்தான் அவர்கள் எமக்கு அந்த முக்கியத்துவத்தைத் தருகின்றனர் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

> **அரசியல் வகுப்பு**
>
> காலம்: இம்மாதம் 11-2-64
> மாலை : 7 மணிக்கு
> இடம் : 91, பண்டாரநாயக்க மாவத்த கொழும்பு-12
> நடத்துபவர்:
> தோழர் எச். எம். பி.
> **மொஹிதீன்**
> ''தொழிலாளி'' ஆசிரியர்,
> அளுத்கடை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம்.

### ஒரு பகுதி

திரிபுவாதத்திற்கு எதிரான எமது போராட்டம் வெறுமனே தேசிய ரீதியிலான ஒரு போராட்டமல்ல, நவீன திரிபுவாதத்திற்கு எதிரான சர்வதேசிய போராட்டத்தின் ஒரு பகுதி இது.

ஆகவே, தோழர்களே, உலகிலுள்ள ஏனைய மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்டுகள் எமது வெற்றிகளிலிருந்தும் அனுபவங்களிலிருந்தும் எவ்வாறு படிப்பினைகளையும் உற்சாகத்தையும் பெருகின்றனரோ, அதேவிதமாக நாமும் அவர்களின் அனுபவங்கள், வெற்றிகளிலிருந்து ஊக்கம் பெறவும் கற்கவும் வேண்டும்.

இன்று நாம் சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தில் நடைபெறும் மூன்றுவது பெரும் விவாதத்தின் மத்தியிலிருக்கிறேம். பழைய போக்குத் திரிபுவாதத்திற்கு எதிரான தமது போராட்டத்தில், லெனின் மார்க்ஸிஸத்தின் அடிப்படை உண்மைகளை கண்டுபிடித்து மீண்டும் கூறவேண்டியதாயிருந்தது. அதேவிதமாக நாமும் இப்பொழுது நவீன திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் மார்க்ஸிஸ—லெனினிஸத்தின் அடிப்படை உண்மைகளை மீண்டும் கண்டுபிடித்துக் கூற வேண்டிய நிலையிலுள்ளோம். உலகின் மாாக்ஸிஸ்ட்—லெனினிஸ்டுகள் சீன கம்யூனிஸ்ட் தலைவர்களின் தலைமையின்

> **இலங்…**
> **யின்…**
> **நா. ச…**
> **உறை…**

கீழ் இந்…
திறம்படச்…
றனர்,

இந்த வி…
திரிபுவாதத…
வெற்றியை…
லாளித்துவ…
யுள்ள 2/3…
ஸத்தின்…
காணும்…
ஸிஸ்ட்—லெ…
ளாகிய நம…

இனி, உ…
கள் சம்பந்த…

**இந்திய…**
**வம்சாவ…**

---

—சென்ற வாரத் தொடர்

# திரிபுவாத சீர்குலைவாளர்களின்

சீன-இந்திய எல்லைப் பிரச்சினையில் திரிபுவாதிகளின் நிலை மிகக் கேவலமானது. இந்தியப் பிற்போக்காளர்கள் சீனப் பிரதேசத்துள் ஊடுருவிப் புகுந்த போதெல்லாம் சீனு பொறுமையைக் கடைப்பிடித்தது. ஆனுல், தங்கள்நாட்டைப் பாதுகாப்பதற்கு எதிர்த்தாக்குதல் அவசியம் என்ற அளவிற்கு இந்தியத் தாக்குதல்கள் வளர்ந்துவிட்டதும், சீன எல்லைக் காவலர்கள் தீர்க்கமான முறையில், மிகத் துரிதமாக எதிர்த்துத் தாக்கி, இந்திய ஆக்கிரமிப்பை முறியடித்தனர். சீனுவின் சமாதான விருப்பின் காரணமாக சரித்திரத்தில் முதல் முறையாக ஒரு வெற்றிகரமான சேனை, சகல எதிர்ப்புகளும் தவிடுபொடியாகி முன்னேற்றத்திற்குத் தடையில்லாத நிலையில், தானுக யுத்தநிறுத்தம் செய்து வாபஸ் வாங்கியது. இதனைச் செய்த சீனுவைத் திரிபுவாதிகள் இன்று ஆக்கிரமிப்பாளன் என்கின்றனர்.

சகோதர சோஷலிஸ சீனுவிற்குஎதிராக முதலாளித்துவ இந்தியாவிற்கு சோவியத் யூனியன் ஆயுதங்களும் யுத்த தளபாடங்களும் உதவி நல்கும் அவமானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு முதலாளித்துவ நாடு ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப்போராடும் போதுதான் அங்கு ஒரு சோஷலிஸ நாடு ராணுவ உதவி வழங்கலாம். ஆனுல், இன்று இந்தியாவிற்கு ஆயுத உதவி தருவது சோவியத் யூனியன்மட்டுமல்ல, அமெரிக்காவும், பிரிட்டனும் கூட வழங்குகின்றன. ஆகவே, இந்தியாவின் போராட்டமும் அதற்கு வழங்கப்படும் உதவியும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதல்ல, சீனுவிற்கு எதிரானவையே.

### கெனடிக்கு அழுதனர்

கெனடியின் மரணம் கூடத் திரிபுவாதிகளைக் காட்டித் தருகிறது. எவரோ ஒருவர் கூறியதுபோல, நாம் கெனடியை அறியவந்தது ஜக்குலின் கென்னடியின் கணவராகவோ அல்லது கென்னடிக் குழந்தைகளின் தந்தையாவோ அல்ல; ஏகாதிபத்தியத்தின் தலைவன் என்ற முறையிலேயே.

தோழர் காஸ்டிரோ சுட்டிக் காட்டியவாறு, நாம் போராடுவது தனி நபர்களுக்கு எதிராகவல்ல, கொள்கைகளுக்கும் சமூக அமைப்புகளுக்கும் எதிராகவே. கென்னடி இறந்த போது குருஷ்சோவ் ஒரு ராஜதந்திர சம்பிரதாயமாக அரசு மட்டத்தில் அனுதாபச் செய்தி அனுப்ப வேண்டியதே. அதை அவர் செய்திருந்தால் யாரும் ஆட்சேபித்திருக்கப் போவதில்லை. ஆனுல், சோவி தலைவர்கள் செய்தது அதுவல்ல. குருஷ்சோவும் குரோமிகோவும் மலர் வளையங்களுடன் அமெரிக்க ஸ்தானிகராலயத்திற்குச் சென்று அழுதார்கள். இலங்கைக்கு விஜயம் செய்த சோவியத் வானவெளி வீரர்கள் மூவரும் கூடக் கென்னடியின் மரணச் செய்தி கேட்டதும் தமது நிகழ்ச்சி நிரலையெல்லாம் ரத்துச் செய்து, தங்களை வரவேற்கவென வீதிகள் நெடுகிலும் திரண்டிருந்த மக்களையெல்லாம் உதாசீனம் செய்து விழுந்தடித்து ஓடிப்போய் அமெரிக்க ஸ்தானிகராலயத்தில் வில்லிசோடு சோகம் கொண்டாடினர். இந்நாட்டின் திரிபுவாத இடதுசாரித் தலைவர்களுக்கும் அமெரிக்க ஸ்தானிகராலயத்திற்குச் சென்று கண்ணீர் சிந்த வேண்டியிருந்தது.

நாம் கண்ணீர் சிந்துவது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவன் கென்னடிக்காக அல்ல, அதனுல் லாவோசிலும், வியட்நாமிலும், உலகமெங்கும் கொன்று குவிக்கப்படும் மக்களுக்காக விடுதலை வீரர்களுக்காகவே சிந்துகிறேம்! (உற்சாகமான கரகோஷம்)

### காட்டிக் கொடுத்தனர்

இந்தியாவில் திரிபுவாதிகள் நேருவின் ஒற்றர்களாக வேலை செய்கின்றனர், மார்க்ஸிஸ-லெனினிஸ வாதிகளின் பெயர்களை அரசாங்கத்திற்குத் தந்து அத்தனை பேரையும் சிறைக்கனுப்பினர்.

அடுத்து நாம் இலங்கையில் திரிபுவாதிகளின் செயல்களால் விளைந்த நிலைமை என்னவெனக் கவனிப்போம்.

## இ.போ.ச. வேலைநிறுத்தத்தின் போ


## அரசாங்க ஒற்றர்களாயினர்!

இலங்கை போக்குவரத்துச் சபைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் போதுதான் திரிபுவாதிகளின் தன்மைகள் நாட்டினருக்குத் தெளிவாகத் தெரிந்தன.

இந்த 17 நாள் வேலை நிறுத்தம் இ. போ. ச. தொழிலாளர்களின் சரித்திரத்தில் முன்காணுத வீரப் போராட்டம். இந்தப் போராட்டத்தை ஆதரிக்க எந்த வகையிலும் முயலாத திரிபுவாதிகள் அதனை முறியடிக்க முயன்றனர். வேலை நிறுத்தத்தின் போது அரசியல் குழுக் கூட்டங்கள் கூடினர். வேலை நிறுத்தத்தை ஆதரிப்பது எப்படி என ஆலோசிக்கவே கூட்டம் கூடினர் எனச் சிலர் கருதலாம். ஆனுல், உண்மை அதுவல்ல, கூட்டம் கூட்டப்பட்டது வேலை நிறுத்தத்திற்குத் தலைமைதாங்கிய சண்ணைத் தண்டிக்கவே!

### பஸ் வேலைநிறுத்தம்

திரிபுவாதத் தலைவர்கள் போராட்டத் திலீடுபட்டிருந்த தொழிலா…
டிப்போக்க…
வில்லை. ஒ…
கள், ஆனுல்…
தை ஆதரிச்…
ச.ச. பஸ் …
நிறுத்தத்தை…
நாள் அ…
வேலை நிறு…
மானித்திரு…
டத்தில் தி…
அடையாள…
தை நடத்த…
ணிடம் கூற…
தொழிலாள…



**7-வது கட்சிக் காங்கிரஸில் பிரேமலால்**

# ...னை தீர சரியான வழி என்ன?"

## ...க்கு உதாரணமாய் திகழ்கிறது"

எவ்வாறு
உற்சாகத்
றனரோ,
ம் அவர்
, வெற்றி
பெறவும்

சர்வதேச
தில் நடை
பெரும்
யிலிருக்கி
க்குத் திரி
ன தமது
லெனின்
டிப்படை
கண்டு
வேண்டி
விதமாக
நவீன
எதிரான
ார்க்ஸிஸ
அடிப்
மீண்டும்
க் கூற
ளோம்.
—லெனி
யூனிஸ்ட்
மையின்

**இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 7-வது காங்கிரஸில் தோழர் நா. சண்முகதாசன் ஆற்றிய உரையின் சுருக்கம் பின்வருமாறு.**

கீழ் இந்தக் கடமையைத் திறம்படச் செய்து வருகின்றனர்,

இந்த விவாதத்தின் முடிவு திரிபுவாதத்திற்கெதிரான வெற்றியையும், உலகில் முதலாளித்துவத்தின் கீழ் மிஞ்சியுள்ள 2/3 பங்கில் சோஷலிஸத்தின் வெற்றியையும் காணும் என்பதில் மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்டுகளாகிய நமக்கு ஐயமில்லை.

இனி, உள்நாட்டுப் பிரச்னைகள் சம்பந்தமாக வருகிறேன்.

### இந்திய வம்சாவழியினர்

இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி விவாதத்தின் போது காட்டப்பட்ட அக்கறை மிகவும் மகிழ்வூட்டுவதாயிருக்கிறது. சில சிறந்த உரைகள் ஆற்றப்பட்டன. சில தவருன கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

இந்தியத் தொழிலாளரே இந்தநாட்டில் தொழிலாளி வர்க்கத்திற் பெரும்பான்மையினர் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது, இது தவறு. இது உண்மை அல்ல என்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

இந்திய வம்சாவழியினரின் உரிமைகள் பற்றி நிலவும் உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். ஆனல், இப் பிரச்சினையை நாம் முழுமையாகப் புரிந்து கொள்வது அவசியம்.

ஒரு புறத்தில் தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர் உள்ளனர். இவர்களே இந்நாட்டிலுள்ள தொழிலாளர்களில் மிக மோசமான, குறைந்த சம்பளம் பெறும் பகுதியினர். இவர்களுக்கு ஜனநாயக உரிமைகள் ஏதுமில்லை; வாக்குரிமையுமில்லை, பிரஜா உரிமையுமில்லை.

### கண்டிப்பகுதி விவசாயிகள்

மறுபுறத்தில், கண்டிய விவசாயி மக்கள் உள்ளனர். இவர்கள் வர்ணனைக்கெட்டாத வறுமைப்பட்டுள்ளனர். இந்த விவசாயிகளில் அனேகர் எஸ்டேட்டுகளின் ஓரங்களில் வசிக்கின்றனர். எஸ்டேட்டில் வாரத்தில் ஒருநாள், இரண்டுநாள் கிடைக்கக் கூடிய வேலையை நம்பி உயிர்வாழ்கின்றனர்.



தோழர் நா. சண்முகதாசன்

சர்வகலாசாலையில் விரிவுரையாளராக உள்ள எனது நண்பர் ஒருவர், ஒரு இந்தியக் கம்யூனிஸ்ட் இந்த மக்களைப் பற்றி ஒரு சர்வே நடத்தினர். அதன் பின் அவர் என்னிடம் கூறியதென்னவெனில், இப் பிரச்சினை குறித்து நீங்கள் உங்கள் கண்ணேட்டத்தைச் சரியாகத் திருத்திக்கொள்ளாவிடில் உங்கள் இயக்கம் இந்நாட்டில் எதிர்காலத்தை இழந்துவிடும் என்பதாகும். காரணம், அவர் தமது ஆராய்ச்சியில் இந்தியத் தொழிலாளர்களைவிடப் படு மோசமான நிலையில் கண்டிய விவசாயிகள் வாழ்வதைக் கண்டதே.

ஆகவே, இப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் இந்த இரு அம்சங்களையும் கருத்திற் கொண்டதாயிருக்க வேண்டும். நாம் உணரவேண்டிய முதலாவது விஷயம், இரு பகுதி மக்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் பலியானவர்கள், இரு பகுதியினரதும் பிரச்சினைகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளால் எமக்கு விட்டுச் செல்லப்பட்டவை என்பதாகும்.

இந்தியத் தொழிலாளர் இன்றுவரை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் சுரண்டப் படுகின்றனர். விவசாயிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளாலேயே தங்கள் நிலங்களிலிருந்து துரத்தப்பட்டனர். இந்நாட்டிலுள்ள பிற்போக்காளர்கள் இந்தியத் தொழிலாளர்களையும், கண்டிய விவசாயி

—6-ம் பக்கம் பார்க்க

# ...ரின் துரோகப் பட்டியல் இதோ!

## ...ன் போது திரிபுவாதிகள் ...ர்!

ருதலாம்.
அதுவல்ல,
பட்டது
குத் தலை
த் தண்

**பஸ் ...த்தம்**

வர்கள்
ட்டிருந்த

தொழிலாளர்களை ஆதரிக்க டிப்போக்களுக்குச் செல்லவில்லை. ஒருமுறை சென்றூர்கள், ஆனல், வேலை நிறுத்தத்தை ஆதரிக்கவல்ல. இ. தொ. ச.ச. பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆதரித்து ஒரு நாள் அடையாளப் பொது வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்திருந்தது. அக் கூட்டத்தில் திரிபுவாதிகள் இந்த அடையாள வேலை நிறுத்தத்தை நடத்தக் கூடாதென சண்ணிடம் கூறினர். இ. போ. ச. தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு வேண்டிய ஆதரவைக் கட்சித் தலைவர்கள் தந்தால் அடையாள வேலை நிறுத்தம் அவசியமில்லை, ஆகவே நீங்கள் டிப்போக்களுக்குச் சென்று வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தருவதாயிருந்தால் அடையாள வேலை நிறுத்தத்தை நடத்தவில்லை, என சண் கூறிய தன் பேரில், அடையாள வேலை நிறுத்தத்தைத் தடுப்பதற்காக வேண்டி டிப்போக்களுக்குப் போகத் திரிபுவாதிகள் இணங்கினர்.



...ல் பிரேமலால் பேருரை

அதன் பிரகாரம், டிப்போக்கு செல்லப் பணிக்கப் பட்டவர்களில் நானும் ஒருவன். கண்டிவரை நான் செல்வதாக ஏற்பாடு. போய் என்ன பேசுவது என்று நான் கேட்டபோது, கெனமனும், சமர விக்கிரமாவும், ''பிரேமலால், போய் நைஸாகத் தொழிலாளர்கள் விரைவில் வேலை நிறுத்தத்தைக் கைவிடும் விதத்தில் பேசு. அதற்கு உனக்குத்தான் திறமையுண்டு'', என்றனர். பிரயாண விபரங்களைப் பற்றிக் கேட்டபோது, கண்டி வரை போகவேண்டிய என்னை ''சும்மா ஒப்பந்தத்தை நாம் மீறவில்லை எனக் காட்டுவதற்காகக் கடவத்தை வரை போய் விட்டு வந்துவிடு'' என்றனர்.

வேலை நிறுத்தத்தைச் சுமுகமாகத் தீர்க்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்த நான் சில அரசாங்கக் கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்தேன். இரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அரசாங்கத்திடம் தங்கள் கட்சி வேலை நிருத்தத்திற்கு எதிரெனவும், அது சண்முகதாசனின் தனிப்பட்ட வேலை எனவும் கூறினர் என அவர்கள் தெரிவித்தனர். கம்யூனிஸ்ட் கட்சி வேலை நிறுத்தத்திற்கு எதிரானதால் அதனை இலகுவாக உடைத்துவிட முடியுயும் என அரசாங்கம் நினைக்கிறது; ஆகவே சுமுகமாக அதனைத் தீர்க்க அரசாங்கம் முயலாது என அவர்கள் என்னிடம் கூறினர்.

இதை நர்ன் அரசியற் குழுவின் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்தேன். அரசியல் குழு கூட்டப்பட்டது; யார் இந்தத் துரோகம் செய்திருப்பார்கள் என விசாரணை நடத்தத்தான் என நினைத்தேன். ஆனல், அதற்கு மாருக, அத்தகவலை அரசியற் குழுவிற்குத் தெரிவித்த என்னைத் தண்டிக்கவே அவர்கள் கூட்டம் நடத்தினர்.

அக் கூட்டத்தில், இந்த இருவர் யாரென என்னிடம் கேட்கப்பட்டது. தெரியாது, அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டுமென நான் கூறினேன். அப்போது கெனமன், ''பிரேமலால் அதை நான் தான் செய்திருப்பேன் என நீ நினைக்கிருயா?'' எனக் கேட்டார்! டாக்டர்விக்கிரமசிங்காவும் அப்படியே கேட்டார்! (கேலிச் சிரிப்பு மண்டபத்தை நிறைத்தது).

அப்படிச் செய்த இருவர் யாரென எனக்கு அப்போதும் தெரியாது, இன்னமும் தெரியாது, ஆனல், அப்படிச் செய்தனர் என்பது நிச்சயம். சில காரணங்களால் நான் ஒருவரைச் சந்தேகிக்கிறேன், ஆனல், முடிவான ஆதாரமின்றித் திரிபுவாதிகளைக் கூட உங்கள் முன்னிலையில் குற்றம் சாட்ட நான் விரும்பவில்லை.

வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைப் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிப்பதைக் கூட கே.எம்.பி. ராஜரத்ன, டாக்டர் டபிள்யூ.டி.டி.சில்வா போன்ரூேர்தான் செய்ய வேண்டியிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இரு இடதுசாரிக் கட்சிகளின் திரிபுவாதிகள் அதன் பின்னர்தான் வேண்டா வெறுப்பாக அதைப்பற்றிச் சில வார்த்தைகளை மென்று உமிழ்ந்தனர். இவ் வேலை நிறுத்தத்தின் பேரால் அவர்கள் திரட்டிய நிதி கூட இன்னும் தொழிலாளர்களுக்குக் கொடுபடவில்லை.

சகல தொழிற் சங்கங்களினதும் பொதுவான 21 கோரிக்கைகள் விஷயத்தில் இத் திரிபுவாத இடதுசாரித் தலைவர்கள் செய்வதென்ன? அதனை ஆதரித்துள்ளனரா? அதனைப் பிரச்சாரம் செய்ய முயன்றுள்ளனரா? அவற்றை வென்றெடுக்கும் போராட்டங்களுக்காகத் தயாரிப்புகள் செய்தனரா? இல்லை. அவை பற்றி விவாதிக்க இ. ஐ. மு. கமிட்டியைக் கூட்டக் கூட இல்லை.

[இடவசதியின்மையால்தோழர் பிரேலாலின் கட்டுரையை இவ்வாரம் பூரணமாகப் பிரசுரிக்க முடியவில்லை. இறுதியான பகுதி அடுத்த இதழில் பிரசுரமாகும்.[

எதிர்பாருங்கள்! விரைவில்
இலங்கை கலா மன்றம் அளிக்கும்
முத்தமிழ் கலை விழா
ஆரம்ப நன்னாள்
எங்கே எப்பொழுது?

## புரட்சியா? பாராளுமன்றமா?

# ....நிஜ சோஷலிஸம்!....

## தத்துவ விளக்கம்

இது அன்றைய ஜெர்மனிய சோஷலிஸ்ட் தத்துவப் போருக்கு அன்றைய பிரஞ்சு சோஷலிஸ்ட் கம்யூனிஸ்ட் தத்துவங்கள் பிரான்சில் அன்றிருந்த பூர்ஷுவா வர்க்க அதிகாரத்தை எதிர்த்தெழுந்த வெளியீடுகளாக இருந்தன. இந்தத் தத்துவங்கள், ஜெர்மனியில் பிரபுத்துவ யதேச்சாதிகாரத்தை ஜெர்மன் பூர்ஷுவா வர்க்கம் எதிர்த்துப் போராடத் தொடங்கியிருந்த சமயத்தில் ஜெர்மனிக்குள் புகுத்தப்பட்டன.

ஜெர்மன் தத்துவ ஞானிகளும், தத்துவ ஞானிகளாக வேஷம் போட்டவர்களும் சுதந்திரச் சிந்தனையாளர்களாக ஆடம்பர விளம்பரம் செய்த சொகுசுக் காரர்களும் இந்தத் தத்துவங்களை உற்சாகத்துடன் வரவேற்றனர். ஆனால், இந்தப் புதிய பிரஞ்சு கருத்துக்களைத் தமது புராதன ஜெர்மன் தத்துவத்துக்கு இசைந்ததாக உருவாக்குவதில்தான்-தமது தத்துவக் கண்ணோட்டத்தைக் கைவிடாதவாறு பிரஞ்சுக் கருத்துக்களைத் தம்முடையதாக்கிக் கொள்வதில்தான்-அப்போதைய ஜெர்மனிய தத்துவ ஆசிரியர்களின் பணி அடங்கியிருந்தது.

இவ்வாறு பிரஞ்சு சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் தத்துவத்துக்குள் தமது அபத்தமான தத்துவார்த்தக் கருத்துக்களைச் செருகி, அவற்றின் ஆண்மையை இழக்கச் செய்தனர். தமது கைங்கரியத்தால் ஜீவனிழந்த இத் தத்துவத்திற்கு ''செயலுக்கான தத்துவ ஞானம்'', ''சோஷலிஸத்தின் ஜெர்மனிய விஞ்ஞானம்'', ''சோஷலிஸத்தின் தத்துவ அடிப்படையில்'', ''நிஜ சோஷலிஸம்'' என்றெல்லாம் பகட்டான பெயர்களை இட்டனர்.

அரசியல் அசமத்துவத்திற்கும், ஏனைய வேற்றுமைகளுக்கும் காரணம் பொருளாதார ஏற்றத்தாழ்வுதான் என்றும், தனிச் சொத்துரிமை ஒழிந்தால் இந்தத் துன்பங்கள் தீர்ந்து விடுமென்றும் இந்த ''நிஜ சோஷலிஸ்டுகள்'' நம்பினர். ஆனால், ஒழுக்க உணச்சியை அடிப்படையாகக் கொண்டுதான் விழுந்து கிடப்பவர்கள் செயலாற்ற வேண்டுமென்றும், என்னதான் நேர்ந்தாலும் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாதென்றும், பலாத்காரப் போராட்டம் நடந்தால் போரின் முடிவில் இரண்டு கட்சிகளும் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தவறுமென்றும் அவர்கள் கருதினர். மனித சமூகம் உண்மையான விடுதலை பெறவேண்டுமானால் சுதந்திரம் சமாதான ரீதியான பரிணாமத்தால் தோன்றவேண்டும்; வர்க்க உணர்ச்சி வளருமுன் இந்த வேலையைச் செய்ய வேண்டுமென்றும் பூர்ஷுவாக்களை எச்சரித்தனர்.

''இந்த 'நிஜ சோஷலிஸம்' ஒரு வர்க்கத்திற்கு எதிராக இன்னொரு வர்க்கம் நடத்தும் போராட்டத்தை பிரதிபலிக்கும் தன்மையை அது இழந்துவிட்டதால் ''பிரஞ்சுக்காரரின் ஒருதலைப் பட்ச பார்வையை', அகற்றிவிட்டதாக, 'நிஜ சோஷலிஸ்ட்' கருதினார். உண்யான தேவைகளையல்ல, உண்மையில் தேவைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக அவன் நினைத்தான். எந்த வர்க்கத்திலும் சேராத, எவ்வித யதார்த்தத் தன்மையுமில்லாத பொதுப் படையான மனிதனின் நலன்களை, பனிமூடிய, தத்துவார்த்த கற்பனையின் ராஜ்யத்தில் மட்டும் வாழக்கூடிய பொதுப்படையான மனிதனின் நலன்களைப் பிரதிபலிப்பதாக அவன் கருதுகிறான்'' என்று நிஜ சோஷலிஸ்டைப் பற்றிக் 'கம்யூனிஸ்ட் அறிக்கை' கூறுகிறது.

(முதல் பகுதி இத்துடன் முடிவடைகிறது.)

**"இளங்கீரன்"**

---

## வருந்துகிறோம்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொழும்பு பிரேதேசக் கிளையின் துணைச்செயலாளரும், கொழும்பு போர்ட் கமிஷன் ஐக்கிய ஊழியர் சங்கத்தில் கடமையாற்றும் தோழர் குணபால ஹேமச்சந்திர அவர்களின் தந்தையார், சிமியோன்ஹாமி பாஸ் இவ்வாரம் காலமான செய்தி கேட்டு மிக வேதனையடைந்தோம்.

அன்னாரது மரணத்தையிட்டு துயரத்தில் ஆழ்ந்திருக்கும் தோழர் ஹேமச்சந்திராவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தொழிலாளி தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

●

எமது சங்கத்தின் முன்னணி தோழர்களில் ஒருவரான மாரியப்பா அவர்களின் அன்புத் தங்கை அண்மையில் காலமானதையிட்டு துயருரும் தோழருக்கும், அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஐக்கிய இன்ஜினியரிங்
தொழிற் சங்க
நெசவாலைக் கிளை.

---

# அனுராதபுரத்தில்வாலிபர்விழா

இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனப் பிரதிநிதிகளின் விழாவொன்று எதிர்வரும் 21, 22, 23-ந் தேதிகளில், அநுராதபுரியில் நடைபெறும்.

இவ் விழாவின் போது, விவாத அரங்குகள், அரசியல் வகுப்புகள் மற்றும் வாலிபர்களுக்கு அவசியமான அம்சங்கள் இடம்பெறும்.

இவ் விழாவில் கலந்துகொள்ள விரும்பும் வாலிபர்கள் தமது வாலிபர் சங்கச் செயலாளரிடம் பூரண விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்-பிரதேச

### வாலிபர் குறிப்பு

16-2-64 காலை
வாலிபர் சம்மேளன பிரதேசக் கமிட்டிக் கூட்டம்,
1-3-64 காலை
வாலிபர் சம்மேளன பிரதேசக் கமிட்டிக் கூட்டம்.
8-2-64
யாழ்-பிரதேச வாலிபர் பிரதிநிதிகளின் முழுநாள் 2-வது மாநாடு.

---

# "இந்திய பிரச்சினை தீர சரியான வழி"

—5-ம் பக்கத் தொடர்

களையும் துவேஷம் வளர்க்க முற்படுகின்றனர்.

எமக்குள்ள ஒரே வழி இரு பகுதி மக்களையும் சரியான கொள்கைக்கு வென்றெடுப்பதும், அவர்களிடையில் நட்பையும், விளக்கத்தையும் பொதுப் போராட்டத்தையும் விருத்தி செய்வதே. அவர்களுக்கு உரிமைகளும் வாக்குகளும் மற்றும் பொய்க் காரியங்களும் பெற்றுத் தருவதாகக் கூறுவதன் மூலம் இதைச் செய்ய முடியாது. அவர்களுக்குப் பொருளாதர உண்மைகளைக் கற்பிப்பதன் மூலமும், இந்நாட்டில் ஒரு சோஷலிஸ அமைப்பு ஏற்பட்டால்தான் இப் பிரச்சினை தீர்க்கப்படும் என்ற உண்மையை அவர்களை உணரச்செய்து அதற்காக இரு பகுதியினரும் கரம் கோர்த்துப் போராடச் செய்வதே இதற்கான வழி.

இப் பிரச்சினையைத் தீர்க்கக் குறுக்கு வழி எதுவும் கிடையாது. இத்தனை இந்திய வம்சாவழியினர் இந்தியாவிற்குச் செல்லவேண்டும், இத்தனை இத்தனை பேர் இந்த நாட்டிலேயே இருக்க வேண்டுமென்று விகிதாசாரக் கணக்குகள் கூறுவதிலெல்லாம் பயன் கிடையாது.

### சரியான மார்க்கம்

இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் இப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை என்பதை நாம் அறிவோம். ஆகவே நாம் அவை பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென வாதித்துக்கொண்டிருக்கக் கூடாது.

இந்தியத் தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுகையில் நாம் பார்க்கவேண்டியது இறுதியில் அவர்களுக்கு அந்த உரிமைகளைக் கொடுக்கும் சக்தி யார் கையிலுள்ளது என்பதாகும். இது சிங்கள மக்களின் கைகளில் உள்ளது. ஆகவே இந்தியத் தொழிலாளர்களின் உரிமையைப் பெறுவதற்கு அவர்களிடமிருந்து சிங்கள மக்களை விரோதித்துக் கொள்ளக் கூடாது. இந்த நாட்டின் ஜனநாயகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இந்தியத் தொழிலாளர் ஜனநாயக உரிமை பெறுவது அவசியமெனச் சிங்கள மக்களை உணரச் செய்வதே சரியான மார்க்கம்.

நாம் எம்மையும் இந்தியத் தொழிலாளர்களையும் சிங்கள மக்களிடமிருந்து தனிமைப்படுத்திக் கொள்ளக் கூடாது. சிங்கள மக்களை விரோதிப்பதால் காரியம் ஆகாது. சரித்திர காரணங்களால்சிங்களமக்களிடையில் இந்தியர் எதிர்ப்புணச்சி இருக்கிறது. இரு பகுதி மக்களும் ஒருவரின் பிரச்சினைகளை ஒருவர் விளங்கிக் கொள்ளச் செய்வதாலும், இந்தியத் தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களுடன் ஒரே அணியில் திரட்டியும், விவசாயிகளை ஸ்தாபன ரீதியாகத் திரட்டியும் கரங்கோர்த்து ஒருவர் உரிமைக்காக மற்றவர் போராடும்படி செய்வதாலும் மட்டுமே இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகள் தரப்படுவது அவசியமெனச் சிங்கள மக்களுக்கு உணர்த்த முடியும்.

பாராளுமன்ற மயக்கம் காரணமாக வாக்குரிமையற்ற இந்தியத் தொழிலாளர்களில் கட்சியின் அக்கறை குறைந்தது உண்மையே. அதை நாம் திருத்த வேண்டும். இந்தியத் தொழிலாளர்கள் மற்றவர்களைவிடப் புரட்சிகரத் தன்மை குறைந்தவர்களல்ல. சி. டி.யூ.எப்.மாநாட்டிற்கு வந்த சீனப் பிரதிநிதிகளுக்குக் கிடைத்த வரவேற்புகளில் மிகப் பிரமாதமான வரவேற்பு தலவாக்கலையில் இந்தியத் தொழிலாளர்களால் தரப்பட்ட வரவேற்பேயாகும். இத் தொழிலாளர்கள் மத்தியில் சீன-இந்திய எல்லைப் பிரச்சினை பற்றிப் பிற்போக்காளர்களால் செய்யப்படும் அத்தனை சீன விரோதப் பிரச்சாரங்கள் மத்தியில் தான் சீனப் பிரதிநிதிகள் இந்தியத் தொழிலாளர்களால் இப்படி வரவேற்கப்பட்டனர்.

ஆகவே, இந்தியத் தொழிலாளர் மத்தியில் தொழிற் சங்கங்கள் மட்டுமன்றி கட்சிக் கிளைகளும் வாலிபர் சங்கங்களும் அமைத்து இயங்க வேண்டும்.

---

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள்
அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை.

# 'மயிர் சுட்டுக் கரியாவதில்லை!'

"விழுந்தும் மீசையில் மண் படவில்லை" என்றுனும் ஒரு பிரகிருதி.

மெண்டிஸ் கும்பலின் புதிய தொழிற் சங்க வீரப் பிரதாபம், மேலேயுள்ள பழமொழியைத்தான் நம் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது.

'ஏரி வீட்டு'ப் பொய்யர்களையும் மிஞ்சிவிட்ட, எமகாதப் பொய்களை சர்வ சாதாரணமாக அள்ளிப் பொழியும் மெண்டிஸ் கும்பலின் பத்திரிகைகள், சென்ற வாரம் தம் சம்மேளனத்தில் சேர்ந்துள்ள 15 தொழிற் சங்கங்களின் பெயர்களை முதல் பக்கத்தில் பிரசுரித்து 'தாம் தூம்' எனத் துள்ளிக் குதித்தன.

இப் பட்டியலில் அடங்கியுள்ள பாதிக்கு மேல் வெறும் 'போர்ட்' சங்கங்கள். அதில் தொழிலாளர்கள் இல்லை. வெறும் பெயர்!

உதாரணத்திற்கு அச்சுத் தொழிலாளர் சங்கத்தைக் குறிப்பிடலாம். இத் தொழிற் சங்கம் இப்பொழுது சி.டி.யூ.எப். புடன் இணைந்து இயங்குகிறது. அண்மையில் வெற்றிகரமாக இவர்கள் மாநாடு கூட்டியதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

ஆனல், சில காடையர்களையும், லங்கா பிரஸிலுள்ள சில 'அப்பாவி'களையும் (அச்சுத் தொழிலாளர் சங்கத்தில் என்றுமே அங்கத்துவம் பெருதவர்கள். ரௌடிகளுக்கு தொழிற் சங்கத்தில் என்ன வேலையோ?) சேர்த்து, மொத்தம் 10 பேர்களைக் கொண்டு நடத்திய ஒரு கூட்டத்தை மிகப் பெரும் தொழிற் சங்கமாக்கியுள்ளனர்.

அதுவும், அச்சுத் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்த ஒரே குற்றத்திற்காக, லங்கா பிரஸ் தொழிலாளர்களான தோழர்கள் அ. ராமநாதன், ஜெயசோம விஜயதிலக, வில்பட் ஆகியோரை திடீரென வேலை நீக்கம் செய்த பிரஸ் முதலாளி அர்னேலிஸ் அப்புஹாமி, இந்த அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருப்பது, 'ஆட்டுக் குட்டியை ஓநாயின் பாதுகாப்பில்' விட்ட கதையாகியுள்ளது.

இன்னெரு வேடிக்கை, அது தான் வட-மாகாண சீவல் தொழிலாளர் சங்கம்.

இத் தொழிற் சங்கத்திலுள்ள மொத்த அங்கத்தவர்கள் மூன்று பேர். பெயர்கள் பின் வருமாறு: எம். சி. சுப்பிரமணியம், ச. இராசையா, அ. தில்லையம்பலம்.

இவர்களில், எம். சி. சுப்பிரமணியம், கள்ளுக்கடை முதலாளி. இராசையா உப-முதலாளி, தில்லையம்பலம் மட்டுமே உண்மையான சீவல் தொழிலாளி-

ஆனல், இவ்வாரம் எமக்குக் கிட்டியுள்ள ஒரு கடிதத்தின் பிரகாரம் (3-ம் பக்கத்தில் பிரசுரித்துள்ளோம்) சீவல் தொழிலாளி தில்லையம்பலத்தை, அவரது முதலாளி எம். சி. சுப்பிரமணியம் வேலைநீக்கம் செய்துள்ளார். (வட-மாகாண சீவல் தொழிலாளர் சங்கம் பற்றி 'தொழிலாளி'யில் பிரசுரமான கட்டுரை அவரின் வேலை நீக்கத்திற்குக் காரணம். இக் கட்டுரைக்கும் தில்லையம்பலத்துக்கும் இவர்கள் எப்படி முடிச்சுப் போட்டார்களோ அறியோம்? 'பனை மரத்தில் தேள் கொட்ட; தென்னை மரத்திலே நெறி கட்டியதாம்!'

ஆக, இன்று வட-மாகாண சீவல் தொழிலாளர் சங்கத்தில் மிஞ்சி இருப்பவர்கள், இரண்டு கள்ளுக்கடை முதலாளிகள். மெண்டிஸ் 'திருக் கூட்டத்தின்' மிகப் பெரிய தொழிற் சங்கம் இது.

இலங்கைத் துறைமுகத்தொழிலாளர் சங்கம் இவர்களின் மற்றுமொரு பிரதான தொழிற் சங்கம். ஆனல், இதில் இருப்பது, துறைமுகத் தொழிலாளர்களால் வெளியேற்றப்பட்ட எஸ்.ஜே.டி. சில்வாவும், அவரது மிகச் சொற்ப பாதந்தாங்கிகளுமே ஆவர். ஆனல், துறைமுகத் தொழிலாளர்கள் மிகப் பிரமாண்ட மாநாடு நடத்தி, தமது புதிய உத்தியோகஸ்தர்களையும், செயற் கமிட்டியையும் தெரிவு செய்து சி. டி. யூ. எப். புடன் இணைத்து இயங்கிக்கொண்டிருக்கின்றனர்.

மற்றைய தொழிற் சங்கங்களில் இன்று பிரதான பாத்திரம் வகிப்பவர்கள் யூ.என்.பி. தூண்கள் (எலிபண்ட் ஹவுஸ் இதற்கு நல்லதொரு உதாரணம்).

இந்த லட்சணத்தில் தான் மெண்டிஸ் கூட்டம் சி.டி.யூ.எப். புடன் போட்டி நடத்தப் போகிறதாம்.

இவர்கள் நடத்தும் போட்டி எத்தகையது?

'தொழிலாளர்களுக்காக யார் அதிகம் போராடுவது? யார் அதிக வெற்றிகளைப் பெற்றுத் தருவது? யார் தொழிலாளர்களை அரசியல் ரீதியில் வளர்த்தெடுப்பது?' ஆகியவைகளிலா போட்டி, இல்லவே இல்லை.

இவர்கள் நடத்தும் போட்டி வேறு விதமானது. 'யார் தொழிலாளர்களின் ஐக்கியத்தை சீர்குலைப்பது? யார் தொழிலாளர்களைப் போராட்ட உணர்விலிருந்து பிரித்தெடுப்பது? யார் தொழிலாளர்களுக்கு முதலாளிகளின் நல்ல குணங்களையும், சிறப்பியல்புகளையும் சொல்லித் தருவது? யார் தொழிலாளர்களை அரசியல் அறிவற்ற அனுதைகளாக வைத்திருப்பது? யார் கேடுகெட்ட இன, மொழி, ஜாதி வெறிகளை அள்ளிக் கொட்டுவது?' ஆகியவைகளிலேயே இவர்கள் போட்டியிடுகின்றனர். தோழர் சண்முகதாசனை சிங்கள மக்கள் மத்தியில் அசல் தமிழனுகக் காட்டுவதற்கு, அவரின் தந்தையின் பெயரான 'நாகலிங்கத்'தையும் இணைத்து இவர்கள் இன்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தள்ளது, இவர்களின் மார்க்ஸிஸம் மண்ணேடு மண்ணுகி ரொம்ப நாட்களாகி விட்டதை மெய்ப்பிக்கிறது.

'ஆண்டிகள் கூடி மடம் கட்டியதாக' சான்றில்லை; 'மயிர் சுட்டுக் கரியானதும்' இல்லை!

ஒரு வார்த்தை

சாட்டை

## வளர்ச்சி நிதி

| | |
|---|---|
| முன் வரவு | 1036 00 |
| ஆர்.எம். உக்குபண்டா | 2 00 |
| நீல் தர்மரத்தின | 1 00 |
| எம்.எம்.டி. தர்மதாச | 1 00 |
| ஏ.யூ. ரொமானிஸ் | 2 00 |
| ஏ. ஏ. ஜயசேன | 1 09 |
| டீ. பி. சுரசேன | 1 00 |
| சி. பவுலிஸ் | 1 00 |
| டி. சைமன் பெர்ணந்து | 1 00 |
| ராஜன் | 4 00 |
| தாமோதரம் | 4 00 |
| . முத்தர் | 25 00 |
| எஸ். ஜோசப் | 25 00 |
| எஸ். தம்புசாமி | 25 00 |
| எச். எல். ஜயசிங்க | 24 00 |
| ஏ. கே. பியதாச | 5 00 |
| சத்தியதாசன் | 60 00 |
| டி. டி. சிரிசேன | 10 00 |
| பி,எச்.கே.டி. சில்வா | 5 00 |
| சலாவுதீன் (புரூக் பொன்ட்) | 2 00 |
| ஜே.ஏ. கரலேன் நோனு பொடிஹாமி | 2 00 |
| எதிரிசிங்க | 1 00 |
| எச். கந்தையா | 1 00 |
| மயில்வாகனம் | 1 00 |
| எம்.பி. ஆத்தர் குரே | 1 00 |
| ஜீ. சோமதாச பெரேரா | 1 00 |
| எஸ். ஜயவீர | 1 00 |
| கொட்வின் சில்வா | 1 00 |
| டி. பி. விமலகுண | 1 00 |
| எச். ஜேமிஸ் பெர்ணந்து | 1 00 |
| எஸ். ஆர். தாஸ் | 5 00 |
| முத்துசாமி | 1 00 |
| பீ. கோவிந்தசாமி | 1 00 |
| ஏ. பி. ராமசாமி | 3 00 |
| கே. பி. பி. லெச்சுமணன் | 1 00 |
| எஸ். பொன்னுசாமி | 1 00 |
| என். டபிள்யு. பாக்கியம் | 5 00 |
| கே. டேனியல் | 2 00 |
| கே. மாணிக்கவாசகர் | 1 00 |
| எஸ். கந்தையா | 1 00 |
| குமாரசாமி | 1 00 |
| டி.எஸ்.பி. ஹெட்டி ஆராச்சி | 5 00 |
| ராகுலன் | 4 00 |
| மூக்கையா | 50 |
| எஸ். சன்னுசி | 50 |
| எஸ். மருதை | 50 |
| எம். பழனிமுத்து | 50 |
| வீ. ராஜ் | 50 |
| ஆர். ஆண்டிராஜா | 50 |
| சேவுகன் நல்லமணி | 50 |
| ராமன் | 50 |
| கே. எஸ். சுப்பமுத்து | 50 |
| லெச்சுமணன் | 50 |
| எம். கருப்பையா மருதை | 50 |
| ஆக மொத்தம் | 1,276 50 |

காலமும் கருத்தும்

# தென் கிழக்கு ஆசியாவின் வெற்றி மார்க்கம் என்ன?

அண்மையில் கூடிய இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி கீழ்வரும் தீர்மானங்கள் எடுத்துள்ளது.

தேசிய விடுதலைக்காகப் போராடும் தென்-கிழக்கு ஆசியக் கம்யூனிட்ஸ் கட்சிகளின் பொதுக் கடமைகள் பின்வருமாறு:

1. பரந்த மக்களைத் திரட்டி ஓர் தேசிய முன்னணியை அமைத்தல்.
2. தொழிலாளி, விவசாயி ஐக்கியத்தைப் பெருக்க கிராமப் புறங்களில் வேலை செய்தல்.
3. கட்சியைப் பலப்படுத்தி மக்களின் பல விதமான போராட்டங்களுக்குத் தலைமை தாங்குதல்.
4. மார்க்ஸிஸ-லெனினிஸ கட்சிகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளைக் கட்டிவளர்த்து ஸ்திரப்படுத்தல்.

தென்-கிழக்காசியப் புரட்சியை வெற்றிபெறச் செய்ய, ஏகாதிபத்தியம், நிலப் பிரபுத்துவம், பெருமுதலாளி வர்க்கம், சர்வாதிகாரம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடல்.

உலகத்தில் புரட்சிக்கான சாத்தியக் கூறுகள் உள்ள பிரதேசம் தென்-கிழக்காசியா. இங்கு ஏகாதிபத்தியம் பலம் குன்றி வருகிறது. மக்கள், புரட்சிகரப் போராட்டங்களில், ஆயுதம் தாங்கியபோராட்டங்களில் பயிற்சிபெற்று வருகின்றனர். இப் பிரதேசத்தின் பல பகுதிகளில், சோஷலிஸம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தென்-கிழக்காசிய தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றி, உலக சோஷலிஸ புரட்சியின் வெற்றிக்குப் பெரிதும் உதவும். அதன் வெற்றியைத் துரிதப்படுத்தும். இப் பிரதேசத்தில் இந்தோனேஷியப் புரட்சியின் முக்கியத்துவமும், கட்சியின் கடமைகளும் மிக முக்கிய இடம் பெறுகின்றன.

## பெல்ஜியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுத் தலைமை

மார்க்ஸிஸ-லெனினிஸ அடிப்படையில் பெல்ஜியக் கட்சியைக் கட்டி வளர்க்கும் நோக்கத்துடன் டிசம்பர் 22-ம் திகதி நடந்த பிரதிநிதிகள் கூட்டத்தின் தீர்மானத்தின்படி தோழர் ஜேக்குவிஸ் கிறப்பாவை செயலாளராகக் கொண்ட ஓர் அரசியல் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் ஆரம்பகால அங்கத்தவரான, தோழர் ஹென்றி கிளினர் உட்பட நாட்டின் பலபாகங்களிலுமுள்ள பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்குபற்றினர்.

பிறசல்ஸ் வலுன், பிளமிஷ் பிரதேசக் கட்சிகளை இணைத்து பெல்ஜியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்படும் முறையும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பேருவிய கட்சியின் புரட்சிப் பாதை

## திரிபுவாதிகளுக்கு கல்தா!

மத்தியக் கமிட்டியின் அதிகப்படி அங்கத்தவர்களும், 17-ல் 13 பிரதேச கமிட்டிகளின் பிரதிநிதிகளும் சேர்ந்து பேருவியின் கட்சியின் நான்காவது தேசிய மாநாட்டை ஜனவரி 18-19-ந் திகதிகளில் கூட்டினர்.

மார்க்ஸிஸ— லெனினிஸ அடிப்படையில், தேசிய சர்வதேசிய பிரச்சினைகள், கட்சியின் நிலை ஆகியவை பற்றி விவாதிக்கப்பட்டது. சர்வ தேசிய ரீதியில் யுத்தம்-சமாதானம், சமாதான சகஜீவனம் ஆயுத பரிகரணம், தேசிய விடுதலை ஆகிய பிரச்சினைகளில், திரிபுவாதக் கொள்கைகள் நிராகரிக்கப்பட்டன. டிட்டோவின் கொள்கைகள் கண்டிக்கப்பட்டதுடன், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி திரிபுவாதிகளுக் கெதிராக நடத்தும் போராட்டங்களை வரவேற்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தேசிய பிரச்சினையில் பேருவில் வளர்ந்துவரும் வர்க்கப் போராட்டத்தைக் கணக்கிலெடுத்து, விவசாயிகள் போராட்டங்களில் கவனம் செலுத்தி, தேசிய விடுதலை இயக்கத்திற்கு, ஏகாதிபத்திய விரோதிகளின் ஐக்கியத்தை வற்புறுத்தும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கட்சிக்குள் இருந்த திரிபுவாதத் தலைவர்களைக் கண்டித்ததுடன் ஊழல்கள் நிறைந்த பல திரிபுவாதத் தலைவர்களை கட்சியிலிருந்து நீக்குவதெனவும் மாநாடு ஏகமனதாகத் தீர்மானித்தது.

தோழர் சற்றுர்ணியோ பறேட்ஸ் மத்தியக்கமிட்டியின் முதல் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### மாளிகாவத்தை

# அப்துல் அலி கம்பெனித் தொழிலாளர் வெற்றி

## முதலாளிகள் பக்கம் சீர்குலைவாளர்கள்

இலங்கைப் பொதுத் தொழிலாளர்சங்க உறுப்பினர்களான மாளிகாவத்தை அப்துல் அலிகம்பெனித்தொழிலாளர்கள் கடந்த ஜனவரி 8-ந் தேதி ஆரம்பித்த வேலை நிறுத்தம் மாபெரும் வெற்றியுடன் 20-1-64 அன்று முடிவுற்றது.

(1) 7 தினம் வருடாந்த விடுமுறை, (2) 5 நாள் காசுவல் விடுமுறை தினங்கள், (3) ஒவ்வொரு சனிக் கிழமையும் ½ நாள் மேலதிக சம்பளம், (4) அவசர தேவை ஏற்படும் கட்டத்தில் அப் பணத்தை முன் தினத்திலேயே வழங்குதல், (5) பிள்ளைப் பேற்றிற்கான கட்டத்தில் சகல பெண்களுக்கும் சம்பளம்வழங்குதல், (6) அரசாங்க பகிரங்க விடுமுறைகள் எட்டு தினங்கள், (7) சகல ஊழியர்களுக்கும் வார நாட்களில் 8 மணி வேலை நேரமும், மேலதிக வேலை நேரம் மணி ஒவ்வொன்றிற்கும் 70 சதம் சம்பளமும் வழங்குதல்.

ஆகிய பெரும் வெற்றிகளை வென்றெடுத்த இவ் வேலை நிறுத்தம், தொழில் கமிஷனர் வித்தியாபரணம் அவர்கள் தொழிலாளர்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபின் முடிவுக்கு வந்தது.

இதையிட்டு எமது பத்திரிகைக்குப் பேட்டியளித்த சங்கப் பொதுச் காரியதரிசி கீழ்க் கண்ட விபரங்களைத் தெரிவித்தார்:

இவ் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதில் முதலாளிகளோடு சேர்ந்து பகுதியில் வாழும் கெனமன் கும்பல் பல முயற்சிகளைச் செய்த போதிலும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் உறுதியாக நின்று இவ் வெற்றிகளைப் பெற்றனர் எனக் குறிப்பிட்டார்.

மேலும், இவ் வெற்றி எதிர்காலத்தில், நெல, கொச்சிக்காய் மற்றும் அவசிய உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்கமளிக்கக் கூடியதென் றும்குறிப்பிட்டார்

—ந.நி




பதுளையில்

# சி. டி. யூ. எப். அணியில் புதிய சங்கம்

## நாட்டாமைகள் ஸ்தாபன ரீதியாகத் திரண்டனர்

"யந்திரம்போல் உழைக்கும் ஏற்றுமதி—இறக்குமதி நாட்டாமைமார்களுக்கு மூட்டைக்கு 5 சதம் கொடுத்து பதுளை வியாபாரிகள் சுரண்டி வருகிறார்கள். இன்றைய வாழ்க்கைச் செலவின் உயர்வை அனுசரித்து குறைந்த பட்சம் ஒரு மூட்டைக்கு 10 சதம் வேண்டும். இது மிகக் குறைந்த கூலிதான். இதைப் பெறும்வரை தொடர்ந்து போராடுவோம்'' என்று, பெப்ரவரி 1-ந் தேதி பதுளை நகரில் நடந்த பதுளை நாட்டாமைத் தொழிலாளர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய திரு. பி. எம். ஜோன் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பதுளைக் கிளையைச் சேர்ந்த தோழர் எஸ். காளிமுத்து அவர்கள் பேசும்போது ''இன்றைய வாழ்க்கைச் செலவை ஒப்பிடும் போது, குறைந்தபட்சம் ஒரு மூட்டைக்கு 20 சதமாவது வேண்டும். ஆனல், நீங்கள் இன்று மிகக் குறைவாக 10 சதம்தான் கேட்கிறீர்கள். இக் கோரிக்கையை பதுளை வியாபாரிகள் சங்கத்தின் முன் வைத்து, தனித்துப் போராடாமல் சங்கம் அமைத்துப் போராடினல், இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் சகல உதவிகளையும்-ஒத்துழைப்பையும் நல்கும்'' எனக் கூறினர்.

பெப்ரவரி 1-ந் தேதி நடந்த இக் கூட்டத்தின் பிரதிபலனக அன்று மாலையே பதுளை வியாபாரிகள் 10 சதம் தர சம்மதித்து, அதைக் கொடுத்தார்கள்.

இந்த வெற்றியினேடு, 2-ந் தேதி இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பதுளைக் கிளைக் காரியாலயத்தில் தோழர் எச். ஏ. த சில்வா தலைமையில் நடந்த நாட்டாமைமார்கள் கூட்டத்தில், பதுளை நாட்டாமைத் தொழிலாளர் சங்கம் அமைப்பதென முடிவு செய்ததோடு, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தோடு இணைந்து செயல்படுவது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

தோழர்கள் பி.எம். ஜோன், டி. எம். பொடி மஹாத்மயா, எஸ்.டி. சிவலிங்கம், ஆர். ஏ. மார்ட்டின் ஆகியோரைக் கொண்ட ஓர் அமைப்புக் கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

—ந.நி

# 21 கோரிக்கைகள் பெற உறுதி

## பிரதான தொழிற்சங்கங்கள் கைச்சாத்திட்டன

ஐக்கியத் தொழிற் சங்க கூட்டுக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் பிரதான தொழிற் சங்கங்கள், கடந்த 31-ந் தேதி இலங்கை தொழிலாளர் சம்மேளனத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 21 கோரிக்கைகள் சம்பந்தமான இறுதி தயாரிப்பு தஸ்தாவேஜில் கைச்சாத்திட்டன.

இக்கோரிக்கைகளை இத்தொழிற் சங்கங்கள் எதிர் வரும் மார்ச் 14-ந்தேதி, மிகப்பெரும் ஊர்வலத்துடன் நடைபெறும் பிரமாண்டபொதுக்கூட்டத்தில்மக்கள்மன்றத்திற்குசமர்ப்பிக்கும்.

சி. டி. யூ. எப்பின் சார்பில் தலைவர் வாட்ஸன் பெர்ணண்டுவும், இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் டாக்டர் என். எம். பெரேராவும் கையொப்பமிட்டனர்.

மேலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் திரு. எஸ். தொண்டமான், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் திரு. அஸீஸ், அரசாங்க சேவை தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் திரு, வில்பிரட் பெரேரா, அரசாங்க தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் திரு. ராஜபக்ஸ, லங்கா ஜாத்திக்க குரு சங்கமேயின் சார்பில் திருவாளர்கள் டி. பீட்டர் சில்வா, எஸ். ஆரியவன்ஸ, இலங்கைத் தொழிற் சங்கங்களின் மத்திய கவுன்ஸிலின் சார்பில் திரு. திலக் குலசேகரா, அாசாங்க குமாஸ்தா ஊழியர் சங்கத்தின் சார்பில் திரு. டி. பி. திஸநாயக்கா, அரசாங்க சேவையாளர் சங்க சார்பில் திரு. ஐ. ஜே. விக்ரம, அரசாங்க வர்த்தக ஊழியர் சங்க சார்பில் திரு. பாலா தம்பு ஆகியோர் கைச் சாத்திட்டனர்.

## தோட்டத் துரை பணிந்தார்

அட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த சாமிமலைப் பகுதியிலுள்ள கவரவிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஐந்து நாட்களாக தோட்ட நிர்வாகத்தின் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து மாபெரும் வேலை நிறுத்தம் செய்தனர். தோட்டத்துரை உடனடியாக சம்பளம் தரசம்மதித்ததாலும், தொழில் கமிஷனரின் சமரச முயற்சியினலும் வேலை நிறுத்தம் முடியுற்றது. தோட்டத்தில் வேலைசெய்த தற்காலிகத் தொழிலாளர்களை வேலைநீக்கியது பற்றியும் திரு. அழகனையும் அவரது மனைவியையும் வேலை நீக்கியது சம்பந்தமாகவும் இம்மாதம் 11-ந் திகதி அட்டன் தொழில் சந்தோரில் தோட்ட நிர்வாகத்தினருக்கும் அட்டன் மாவட்ட சங்கப் பிரதநிதிகளுக்குமிடையில் மாநாடு நடைபெறும்.

## போராட்டத்திற்கு தயார்

முன்னள் ஏயர் சிலோன் மனேஜர் ஜே. எல். எம். பெர்ணண்டோவிற்கு சொந்தமான அட்டன் நகரைச்சேர்ந்த அட்டன் தோட்டத்தில் இம்மாதம் 2-ந் திகதி செங்கொடிச் சங்கக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தர்மதாச (பொதுச்செயளாளகர்: கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம்) எச்.எம்.பி. மொஹிதீன் ('தொழிலாளி' ஆசிரியர்) ரொசாரியோ பெர்ணண்டு, . ஏ. ஒஇராமையா, பி. சத்தியவேல், பி. தங்கராஜ் மற்றும் பலர் இக்கூட்டத்தில் கலந்து சொற்பொழிவாற்றினர். (இக்கூட்டம் பற்றிய முழு விபரமும் அடுத்த வார 'தொழிலாளி'யில் வெளிவரும்)

மானிப்பாய்

## கிரீன் ஆஸ்பத்திரி நிர்வாகம் தோற்றது

### வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் வேலை

மானிப்பாய் கிரீன் ஆஸ்பத்திரி ஊழியர் சங்கத்தின், தலைவரான திரு. இரா சிவ அன்பும், காரியதரிசியானதிரு. ஜோசப்பும், தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் இவ் வேலை நீக்கத்தை ஆட்சேபித்ததன் பலனக, ஓர் விசாரணை கடந்த வெள்ளியன்று (24-1-64) நடைபெற்றது. மேற்படி சங்கம் இணைந்துள்ள இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன், தொழிலாளர்களின் சார்பில் வாதிட்டார். விசாரணையின் முடிவில், இருவரும் மீண்டும் வேலைக்கமர்த்தப் பட்டனர். பின்பு திரு. இரா சிவ அன்பு தானகவே தனது ஆஸ்பத்திரிப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்து, மூன்று மாதசம்பத்ளதையும் பெற்றுக் கொண்டார்.

—ந.நி

## கெனமனே பதில் சொல்!

திரிபுவாத கோஷ்டித் தலைவர் கெனமனின் கையாள் நடேசன் சமீபத்தில் ''தேசாபிமானி'' பத்திரிகையில் திரிபுவாத சங்கத்தின் தலவாகொலைப் பிரதிநிதியாக ஒருவரை நியமித்துள்ளதாக ஒரு அறிக்கை விட்டிருந்தார். ஆனல் இந்த நண்பர் தொழிலாளர் கழகத்தில் வேலை செய்கிறார், வகுப்புவாத தொழிலாளர் கழகமும், கெனமன் கோஷ்டியின் தோட்டத் தொழிலாளர் சங்கமும் ஒன்ரு? 'இல்லாதஒருவரை' பிரதிநிதியாக நியமித்ததை, கெனமனே உம்மால் மறுக்க முடியுமா?

## குரலும்கோஷமும்

தோட்டத் தொழிலாளர்களை நசுக்கும் நோக்கத்தோடு தோட்டக் கண்டக்டர், செங்கொடிச் சங்கத் தொழிலாளர்களை அடிக்கடி வேலைத் தளத்திலிருந்து வீட்டிற்கு விரட்டும் பிரச்சினை பற்றி பேச அட்டன் ஜில்லா ஆபீசில் தோட்டக் கமிட்டிப் பிரதிநிதியின் தலைமையில் கூடியது. நீண்ட விவாதத்திற்குப்பின் இனிமேல் தொழிலாளர்களை அநியாயமாக வீட்டிற்கு விரட்டினல் உடனடியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்குவதென தீர்மானிக்கப் பட்டது.

பதிப்பித்து வெளியிடுபவர்:ஹஸன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது தொழிலாளி அச்சகம். 9, டிமெல் விதி.